மாலை முரசு
பக்கங்கள் 20
முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஐப்பசி 28 வெள்ளிக்கிழமை 17.11.2023 அதிர்வு 109

## 5 மாணவர்களுக்கு அதிகூடிய புள்ளிகள்

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறு பேறுகளுக்கு அமைய 5 மாணவர்கள் 198 என்ற அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளனர் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். 04

# யாழ். இந்து மகளிர் பாடசாலை மாணவி மாவட்டத்தில் முதலிடம் பிடித்துச் சாதனை

### விஞ்ஞானியாகுவதே தன் இலக்கு என்றும் தெரிவிப்பு



(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

2023 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மாணவி முதலிடம் பிடித்துச் சாதனை படைத்துள்ளார்.

ஜெராட் அமல்ராஜ் வனிஷ்கா என்ற மாணவியே 196 புள்ளிகளைப் பெற்று யாழ். மாவட்டத்தில் அதிகூடிய புள்ளியைப் பெற்று வரலாற்றில் முதல் தடவையாக யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார். 04

# நினைவேந்தலுக்கு தடை விதிக்க மட்டக்களப்பு நீதிமன்றம் மறுப்பு!



### இரு பொலிஸ் நிலையங்களின் விண்ணப்பங்கள்

### சுமந்திரனின் சட்ட வாதத்தையடுத்து நிராகரிப்பு

(ந.லோகதயாளன்)

மட்டக்களப்பில் மாவீரர் நினைவேந்தல்களுக்குத் தடை விதிக்கவும், அந்நிகழ்வுகளில் பங்குபற்றக் கூடாது என முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தமிழ்த் தேசியப் பிரமுகர்களுக்குத் தடை உத்தரவு வழங்கவும் கோரிக்கை விடுத்து மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் மட்டக்களப்பு மற்றும் கொக்கட்டிச்சோலைப் பொலிஸார் சமர்ப்பித்த விண்ணப்பங்களை நீதிமன்றம் இன்று நிராகரித்துக் கட்டளை வழங்கியது.

ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மேற்படி பிரமுகர்கள் அனைவர் சார்பிலும் மட்டக்களப்பு சட்டத்தரணிகளில் பெரும் எண்ணிக்கையானோரின் அனுசரணையுடன் இன்று நீதிமன்றத்தில் முன்னிலையாகி நடத்திய நீண்ட சட்டவாதத்தை அடுத்தே இந்த நிராகரிப்புக் கட்டளையை நீதிவான் வழங்கினார். 04



## கொடிகாமத்தில் ஒருவர் கேரள கஞ்சாவுடன் கைது



(கொடிகாமம் நிருபர்)

யாழ்ப்பாணம், தென்மராட்சி, கொடிகாமத்தில் கேரளா கஞ்சாவுடன் 04

## 30 தமிழ்ப் பிரமுகர்கள், 6 யாழ். பல்கலை மாணவர்கள் மீதான வழக்குகளை ஒத்திவைத்த ஏறாவூர் நீதிமன்றம்



(விரிவான செய்தி 2ஆம் பக்கத்தில்)



## இளைஞருக்கு எமனான பிட்டு

(பருத்தித்துறை நிருபர்)

புட்டு சாப்பிடும் போது புரைக்கேறியதால் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். 04

## வேப்பமரக் கிளை முறிந்து இளம் குடும்பஸ்தர் மரணம்


(ந.லோகதயாளன்)



தூக்கில் தொங்குவது போன்று மனைவிக்குப் பாசாங்கு செய்தவர் மரக் கிளை முறிந்தமையால் உயிரிழந்த சம்பவம் நெடுந்தீவில் இடம்பெற்றுள்ளது.

இரு பிள்ளைகளின் தந்தையான 26 வயதுடைய நபரே நேற்று 04

## பாம்பு தீண்டி குடும்பஸ்தர் ஒருவர் சாவு



(ந.லோகதயாளன்)

மாட்டுக்குப் புல் பிடுங்கிய வேளை பாம்பைப் பிடித்தவரைப் பாம்பு தீண்டியதில் 15 நாள் சிகிச்சையின் 04

# 30 தமிழ்ப் பிரமுகர்கள், 6 யாழ். பல்கலை மாணவர்கள் மீதான வழக்குகளை ஒத்திவைத்த ஏறாவூர் நீதிமன்றம்






**(கனகராசா சரவணன்)**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டக்களப்புக்குக் கடந்த செப்டெம்பர் மாதம் 8ஆம் திகதி வந்த வேளை அவருக்கு எதிராகத் தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடத்தினர் எனத் தெரிவித்து மட்டக்களப்பு மாவட்டத்தின் முன்னாள் எம்.பிக்கள் உட்பட 30 பேருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கின் உத்தரவை எதிர்வரும் ஜனவரி 24ஆம் திகதிக்குத் தான் வழங்குவார் எனத் தெரிவித்து, அந்தத் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்த ஏறாவூர் நீதிவான், எதிராளிகள் அனைவரையும் கைது மற்றும் பிணையில் விடுவித்தல் போன்ற நடவடிக்கை எதற்கும் உட்படுத்தாமல் விடுவித்தார்.

இந்த விடயத்தில் 35 பேருக்கு எதிராக நடவடிக்கையைப் பொலிஸார் ஆரம்பத்தில் முன்னெடுத்தனர். எனினும், இரா.சாணக்கியன் எம்.பி. உட்பட ஐவரைத் தவிர்த்து 30 பேருக்கு எதிராகவே இப்போது வழக்கு நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

ஜனாதிபதியின் மட்டக்களப்பு வருகையை எதிர்த்து நீதிமன்றத்தின் கட்டளையை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 30 பேருக்கும் மற்றும் மேய்ச்சல் தரைப் பண்ணையாளர்களுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வேளை கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட யாழ். பல்கலைகழக மாணவர்கள் அறுவருக்கும் எதிராகத் தொடரப்பட்ட இரு வழக்குகளும் இன்று ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த செட்டெம்பர் 8 ஆம் திகதி செங்கலடி மத்திய மகா வித்தியாலயத்தின் 149 ஆவது வருட நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ள வருகை தந்திருந்தார்.

இதன்போது உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மேய்ச்சல் தரைப் பண்ணையாளர்களுக்கு ஆதரவு தெரிவித்து செங்கலடி – வாழைச்சேனை பிரதான வீதி, கொம்மாந்துறை விநாயகர் வித்தியாலயத்துக்கு அருகில் நீதிமன்றக் கட்டளையை மீறி ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டபோது பொலிஸார் வீதித் தடையை ஏற்படுத்தித் தடுத்து நிறுத்தினர். இந்தச் சந்தர்ப்பத்தில் வீதியை மறித்துப் பண்ணையாளர்கள், சிவில் அமைப்பினர் மற்றும் அரசியல்வாதிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் எனத் தெரிவித்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியேந்திரன், ஞா.சிறிநேசன், சீ.யோகேஸ்வரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் த.சுரேஸ், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் தலைவி, ஒரு ஊடகவியலாளர் மற்றும் பண்ணையாளர்கள உட்பட 30 பேருக்கு எதிராக ஏறாவூர் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர்.

ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் மேலதிக நீதிவான் அன்வர் சதாக் முன்னிலையில் 29 பேர் இன்று முன்னிலையான நிலையில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது இவர்களுக்காக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சிரேஷ்ட சட்டத்தரணி பிறேம்நாத், சட்டத்தரணிகளான சின்னாத்துரை ஜெகன், மயூரி ஆகியோர் மன்றில் ஆஜராகினர்.

ஆர்ப்பாட்டத்தை அறிக்கை செய்யும் கடமையில் ஈடுபட்ட ஊடகவியலாளருக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்துள்ளமை மூலம் பொலிஸார் மிகக் கேவலமாகச் செயற்பட்டுள்ளனர் என்று ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன், நீதிவானுக்குச் சுட்டிகாட்டினார்.

அரசியல் ரீதியில் ஒன்றுகூடி அமைதியாக எதிர்ப்புத் தெரிவிப்பது பிரஜைகளுக்கு அரசமைப்பில் உறுதி செய்யப்பட்ட அடிப்படை உரிமை. அதை மறுத்து இந்த வழக்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது என்று சுமந்திரன் வாதிட்டார்.

இந்த வழக்கையொட்டி பொலிஸ் தரப்பில் சில கருத்துக்கள், தகவல்கள் முன்வைக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டமையால் அதற்காகக் கால அவகாசம் வழங்க நீதிவான் இடமளித்தார்.

இதனைத் தொடர்ந்து நீதிவான் எதிராளிகளுக்குப் பிணை தேவையில்லை எனக் குறிப்பிட்டு, வழக்கை எதிர்வரும் ஜனவரி 24 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். அத்துடன் இன்றைய வழக்கு விசாரணைக்கு வராத ஒருவருக்கு அழைப்பாணை வழங்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அதேவேளை, கடந்த 5ஆம் திகதி பண்ணையாளர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட யாழ். பல்கலைகழக மாணவர்கள் 6 பேரைக் கைது செய்து பிணையில் விடுவித்த வழக்கு அதே நீதிமன்றில் இன்று எடுக்கப்பட்ட நிலையில் அதனையும் ஜனவரி 24 ஆம் திகதிக்கு நீதிவான் ஒத்திவைத்தார். அந்த வழக்கிலும் சுமந்திரன் அணியினர் முன்னிலையாகி மாணவர்களுக்காக வாதிட்டனர்.



# அதிவேக நெடுஞ்சாலையை வாழைச்சேனைக்கு விஸ்தரிக்குக!

## நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் கோரிக்கை

**(எம்.என்.எம்.அப்ராஸ்)**



தற்போது தம்புள்ளை வரையுள்ள அதிவேக நெடுஞ்சாலையை வாழைச் சேனை வரை விஸ்தரிக்க வேண்டும் என்று அரசிடம் நாடாளுன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் வேண்டுகோள் விடுத்தார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றில் உரையாற்றிய போது அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அவர் மேலும் அங்கு உரையாற்று கையில்,

இலங்கையில் வெளிநாட்டு முதலீடு கள் வருகின்ற போது நாட்டில் எதிர் பாராதா பொருளாதார மலர்ச்சி நிச்சயம் ஏற்படும் என்ற நம்பிக்கை உள்ளது.

உதாரணமாக நான் பிரதிநித் துவப்படுத்தும் கிழக்கு மாகாணம் இன்று எல்லா வளமும் இருக்கும் ஒரு மாகா ணமாகும். சுற்றுலா துறையை எடுத்து கொண்டால், அருகம்பை பிரதேசம் அதே போல் பாசிக்குடா, நிலாவெளி, அதற்கிடையில் பல நகரங்களில் சுற்றுலாத் தளங்களாக உள்ளன.

இந்த நிலையில் பலமடங்கு அபி விருத்தி செய்ய வேண்டிய பிரதேசமாக கிழக்கு மாகாணம் உள்ளது .

ஆனால் அங்கு நிலையான அபிவி ருத்தி என்பது இன்று மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் உள்ளது. அதாவது தலை நகரத்துக்கும், விமான நிலையத்துக்கும், கிழக்கு மாகாணத்துக்கும் இடையிலான போக்குவரத்து என்பது ஒரு பெரும் சாவாலான விடயமாக உள்ளது. முன்னைய ஜானாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ, மைதிரிபால ஸ்ரீ சேனவின் அரசுகள் நாட்டில் அதிவேக நெடுஞ் சாலைகளை பல இடங்களில் விஸ்தரித்து இருந்தன.

எங்கள் ஜனாதிபதி அவர்களிடமும் இங்கு உள்ள இராஜாங்க நிதியமைச்சர், இராஜாங்க முதலீட்டு அமைச்சர் ஆகியோரிடம் நாங்கள் விடுக்கின்ற வேண்டுகோள் என்னவென்றால், தம்புள்ளை வரையுமான அதிவேக நெடுஞ்சாலையை கிழக்கு மாகாணத் துக்கு குறைந்த பட்சம் வாழைச் சேனைவரை முதற்கட்டமாக விஸ்தரிக்க வேண்டும் என்பதே.

அதற்கான வரைபடம், மதிப்பீட்டு தொகையைத் தாயாரிக்க நடவடிக் கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். இதனால் கிழக்கு மாகாணத்தில் சுற்று லாத்துறை மட்டுமல்லாமல் கைத் தொழில் புரட்சியை ஏற்படுத்த முடியும்.- என்றார்.

## அகில இலங்கை சித்திரப் போட்டி; கிழக்கு மாகாணத்தில் முதலிடம்!

**(வி.ரி.சகா தேவராஜா)**



2023 நடைபெற்ற அகில இலங்கை சிறுவர் சித்திரப் போட்டியில் சம்மாந்துறை வலயக் கல்விப் பணிமனைக்கு உட்பட இறக்காமம் அஷ்ரப் மத்திய கல்லூ ரியில் ஆறாம் தரத்தில் கல்வி பயிலும் அப்துல் முனாப் பாத்திமா நுஸை பா கிழக்கு மாகாண மட்ட போட்டியில் பங்கு பற்றி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இதன் மூலமாக இவர் தேசியமட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ளார்.

இவர் சம்மாந்துறை வலயக் கல்விப் பணிமனையில் சித்திர பாட வளவாளராக சேவையாற்றும் இறக்காமத்தைச் சேர்ந்த எஸ். எல்.ஏ.முனாவ்வின் புத்திரி ஆவார்.



## விவாதப் போட்டியில் முதலாமிடம்

**(ஹஸ்பர்)**

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு திரு கோணமலை உப்பு வெளி பிரதேச சபை பொது நூ லகத்தின் ஏற்பாட்டில் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட விவாதப் போட்டியில் திருகோணமலை சாம்பல் தீவு தமிழ் மகா வித்தியாலயம் முதலாம் இடத் தைப் பெற்றுள்ளது.

ஜெ.சனுஜன் , ப.அருள்ராஜா, க.அஸ்வின், ச. கிருஸ்தா, சு.கதுர்சிகா ஆகிய மாணவர்கள் இதில் பங்குபற்றியிருந்தனர்.

## விடைத்தாள் மீள் பரிசீலனைக்கு 27 முதல் விண்ணப்பிக்கலாம்

புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு கள் தொடர்பான விடைத்தாள் மீள் பரிசீலனைக்கு விண்ணப்பங்களை ஏற்கும் காலம் தொடர்பில் இலங்கை பரீட்சைகள் திணைக்களம் விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதன்படி எதிர்வரும் 27ஆம் திகதி முதல் டிசெம்பர் 4ஆம் திகதி வரையில் பரீட்சார்த்திகள் தமது மேன்முறையீட்டை சமர்ப்பிக்க முடியும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.நிகழ்நிலை முறையில் குறித்த விண் ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு இலங்கை பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு கள் நேற்றிரவு வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### 5 மாணவர்களுக்கு...

புலமைப் பரிசில் பரீட்சை நிறைவடைந்து ஒரு மாத காலத்துக்கு அதற்கான பெறுபேறு வெளியிடப்பட்டுள்ளது. இதன் பின்னணியில் செயற்பட்ட அனைவருக்கும் நன்றி கூற வேண்டும் என்றும் கல்வி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

பெறுபேறுகளின் அடிப்படையில் 198 புள்ளிகளை 5 மாணவர்களும், 197 புள்ளிகளை 4 மாணவர்களும், 196 புள்ளிகளை 8 மாணவர்களும் பெற்றுள்ளனர்.

கல்வி மறுசீரமைப்புக்கான அனுமதி கிடைக்கப் பெறும் போது, தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் போது மாணவர்களுக்கு ஏற்படும் தாக்கங்களைக் குறைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேலும் கூறியுள்ளார்.

### வேப்பமரக் கிளை...

இவ்வாறு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நெடுந்தீவுப் பகுதியில் வசிக்கும் இளம் குடும்பஸ்தர் ஒருவர் மனைவியுடன் பேசியவாறு தான் தற்கொலை செய்வேன் என வேப்பமரத்தில் தூக்கிட்டு பாசாங்கு செய்த வேளை மனைவி அதனைக் கண்ணுற்று எள்ளி நகையாடியுள்ளார்.

இதனால் அந்தக் குடும்பஸ்தர் தூக்கை மாட்டியவாறு மரத்தில் இருந்து கீழே இறங்க முற்பட்ட வேளை வேப்ப மரக் கிளை முறிந்துள்ளது. அந்தக் குடும்பஸ்தரும் உண்மையிலேயே தூக்கில் அகப்பட்டுள்ளார்.

இதன்போது அவர் அதில் இருந்த தப்ப முடியாது தவித்த வேளை அவரைக் காக்கும் நோக்கில் மனைவி காலைப் பிடித்தவாறு அவலக் குரல் எழுப்பியபோதும் அருகில் எவருமே இல்லாத நிலையில் உடன் எவரும் அவ்விடத்துக்குச் செல்லவில்லை. இந்நிலையில், குடும்பஸ்தர் அந்த இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்தார்.

அவரது சடலம் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் மனைவியிடம் ஒப்படைக்கப்பட்டது.

### நினைவேந்தலுக்கு...

“உயிரிழந்த ஒருவருக்காக நினைவேந்தும் உரிமை ஒவ்வொரு பிரஜைக்கும் உண்டு. அது அடிப்படை உரிமையும் கூட. அதை மறுக்கும் நடவடிக்கைக்கு நீதிமன்றம் துணை போகக்கூடாது. மாறாக, அந்த உரிமை நிலை நாட்டப்படுவதை நீதிமன்றம் உறுதி செய்ய வேண்டும்” என்று சாரப்பட நீண்ட சட்டவாதத்தை சுமந்திரன் நிகழ்த்தினார்.

அதையடுத்து பொலிஸாரின் விண்ணப்பங்களை நிராகரிக்கும் கட்டளையை நீதிவான் வழங்கினார்.

வேறு ஒரு வழக்குக்காக மட்டக்களப்பு நீதிமன்றத்தில் சுமந்திரன் பிரசன்னமாகி இருந்த தருணத்திலேயே பொலிஸாரின் இந்த விண்ணப்பங்கள் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டன.

விடயத்தை அவதானித்த ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தானாக எழுந்து தடை விதிக்கக் கோரப்பட்ட பிரமுகர்கள் சார்பில் தாம் முன்னிலையாகிப் பதில் வாதம் செய்ய விரும்புகின்றார் என விண்ணப்பம் செய்தார். அச்சமயம் மன்றில் பிரசன்னமாகியிருந்த பெரும் எண்ணிக்கையான தமிழ்ச் சட்டத்தரணிகள் தாங்களும் சுமந்திரனுக்கு அனுசரணையாகப் பிரசன்னமாகின்றனர் எனப் பதிவு செய்தனர்.

மட்டக்களப்பு பொலிஸாரின் விண்ணப்பம் முதலில் நிராகரிக்கப்பட்ட நிலையில், அதையடுத்து கொக்கட்டிசோலை பொலிஸாரின் விண்ணப்பம் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. முன்னைய வழக்கின் காரணங்களின் அடிப்படையில் இந்த விண்ணப்பமும் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது.

### கொடிகாமத்தில்...

நபர் ஒருவர் இன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

கொடிகாமம் பொலிஸ் நிலையத்துக்குக் கிடைக்கப் பெற்ற

இரகசியத் தகவலின் அடிப்படையில் அந்த நபரைக் கைது செய்துள்ள பொலிஸார், அவரிடம் இருந்து 11 கிலோகிராம் கேரள கஞ்சாவை மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர், கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவரிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### பாம்பு தீண்டி...

பின்பு அவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், கைதடி மேற்கைச் சேர்ந்த அருச்சுணன் சுந்தரலிங்கம் என்னும் 55 வயது குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வளர்ப்பு மாட்டுக்குப் புல் பிடுங்கிய வேளை புல்லுக்குள் மறைந்திருந்த புடையன் பாம்பைம் தவறுதலாகப் பிடித்து விட்டார். இதன்போது கையில் அகப்பட்ட பாம்பு தீண்டிவிட்டது.

இம்மாதம் முதலாம் திகதி இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அகப்பட்ட குடும்பஸ்தர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று சிகிச்சை பலனின்றி பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இவரது மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

### இளைஞருக்கு...

யாழ்ப்பாணம், பருத்தித்துறை, கற்கோவளம் பகுதியைச் சேர்ந்த இராசரத்தினம் சுமணன் (வயது 21) எனும் இளைஞரே உயிரிழந்துள்ளார்.

அந்த இளைஞர் வீட்டில் புட்டு சாப்பிட்ட போது,அதுபுரைக்கேறியுள்ளது.அதனைத் தொடர்ந்து தனக்கு நெஞ்சு அடைப்பதாக அவர் கூறியபோது, வீட்டார் சுடுதண்ணீர் குடிக்கக் கொடுத்துள்ளனர்.

சில நிமிடங்களில் இளைஞர் மயங்கி விழுந்ததை அடுத்து, அவரை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வீட்டார் சேர்த்தனர். எனினும், இளைஞர் வைத்தியசாலைக்கு வருவதற்கு முன்னரே உயிரிழந்து விட்டார் என வைத்தியர்கள் அறிக்கையிட்டனர்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற உடற்கூற்றுப் பரிசோதனையில், சுவாசக் குழாய்க்குள் உணவு மாதிரிகள் காணப்பட்டதை அடுத்து, சுவாசக் குழாய்க்குள் உணவுப் பதார்த்தம் அடைத்துக் கொண்டமையாலையே மரணம் சம்பவித்துள்ளது என்று அறிக்கையிடப்பட்டது.

### யாழ். இந்து...



இம்முறை இந்தப் பாடசாலையில் இருந்து 110 மாணவர்கள் பரீட்சைக்குத் தோன்றிய நிலையில், 35 மாணவர்கள் வெட்டுப்புள்ளியைத் தாண்டி சித்தி அடைந்து பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார்கள்.

அதிலும் வரலாற்றில் முதன்முதலாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அதிகூடிய புள்ளியைப் பெற்று யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மாணவி பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது என யாழ்ப்பாணம் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையின் அதிபர் சிவந்தினி வாகீசன் தெரிவித்தார்,

சாதனை படைத்த மாணவி வனிஷ்கா தனது பெற்றோருடன் இணைந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

“என்னைப் போன்று எதிர்காலத்தில் மாணவர்கள் அதிக புள்ளியைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்க்க வேண்டும். எதிர்காலத்தில் விஞ்ஞானியாக வந்து இலங்கைக்குப் பெருமை சேர்ப்பதே எனக்கு இலக்கு.” – என்றார்.

# மக்கள் விரோதத்தை வெளிப்படுத்தி நிற்கும் வரவு - செலவுத் திட்டத்தை நிராகரியுங்கள்!

## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் செந்திவேல் அறிக்கை

ரணில் விக்கிரமசிங்கவின் ஏகாதிபத்திய அடிவருடித்தனத்தையும் அவரின் வழமையான உழைக்கும் மக்கள் விரோதத்தையும் தெளிவாக வெளிப்படுத்தும் இந்த வரவு - செலவுத் திட்டத்தை மக்கள் உறுதியாக நிராகரிக்க வேண்டும்.

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி. கா.செந்திவேல் வரவு - செலவுத் திட்டம் பற்றிக் கட்சியின் சார்பில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாணய நிதியத்தின் விருப்பங்களை அதன் நிபந்தனைகளுக்கு இணங்க மனப்பூர்வமாக நிறைவேற்றி வருகிறார் என்பதில் எவருக்கும் ஐயமில்லை.

அதற்கமைய, அவர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம், அந்நிய முதலீட்டாளர்களின் ஆதிக்கத்துக்கு வழிவகுத்து உள்நாட்டுப் பெரு முதலாளிகளதும் தரகு முதலாளிகளதும் இலாபம் வீங்கிப் பெருகுமாறு அமைந்துள்ளது.

நாட்டின் தொண்ணூறு சதவீதத்தினரான தொழிலாளர், விவசாயிகள், மீனவர்கள், அன்றாட உழைப்பாளர்கள், அரச, தனியார் துறையினர் உள்ளிட்ட உழைக்கும் மக்களுக்கு அதனால் எவ்வித நன்மையோ வரப் பிரசாதமோ கிடைக்கப் போவதில்லை.



ஏற்கெனவே அத்தியாவசிய உணவுகள், அன்றாடப் பாவனைப் பொருட்கள், மருந்துகள், எரிபொருள் ஆதிய வற்றின் விலைகளும் போக்குவரத்து, நீர், மின்சார, பொதுச் சேவைக் கட்டணங்களும் வெகுவாக உயர்ந்ததால் வாழ்க்கைச் செலவைத் தாங்க முடியாது திணறும் மக்களுக்கு, இந்த வரவு - செலவுத் திட்டம் மரண அடியாகவே அமைந்துள்ளது.

எனவே மக்களுக்கு முன் உள்ள ஒரே தெரிவு அவர்களைக் கொள்ளையடிக்குமாறான மேலதிக வரிவிதிப்புக்களையும் சூறையாடும் நோக்குடைய அந்நிய முதலீட்டுத் திட்டங்களையும் கொண்டு மக்களை ஏய்த்துக் கசக்கிப் பிழிய ஆயத்தமாய் நிற்கும் இந்த வரவு - செலவுத் திட்டத்தை எதிர்த்து வீதியில் இறங்குவதே சரி என எமது கட்சி கருதுகிறது.

எமது நாடு விவசாய வளங்களும் கடல் வளங்களும் நிறைந்ததுஎன்பதை வரவு - செலவுத் திட்டம் கருத்தில் கொள்ளவில்லை. அவ்வாறேபாரம்பரிய ஏற்றுமதிகளான தேயிலை, ரப்பர் உற்பத்திகளின் முக்கியத்துவமும் தவறவிடப் பட்டுள்ளது. கால் நடைவளர்ப்பு, பால், முட்டை உற்பத்திகள் உள்ளிட்ட உள்ளூர் உற்பத்திகள் பற்றி ஒரு கரிசனையையும் இந்த வரவு - செலவுத் திட்டம் காட்டவில்லை.

ஒட்டுமொத்தத்தில், ரணில் - ராஜபக்ஷ அரசு முன்வைத்துள்ளது. தேசிய பொருளாதாரம், உள்நாட்டு உற்பத்திகள் என்பவற்றை அறவே புறக்கணிக்கும் அந்நிய அடிவருடித்தனம்மிக்க ஒரு மோசமான வரவு - செலவுத் திட்டமே.

அத்துடன், சர்வதேச நாணய நிதியத்தின் கட்டாயப்படுத்தும் நிகழ்ச்சி நிரலுக்கு அமையக் கல்வி, மருத்துவத் துறைகளில் இன்னமும் இருந்துவரும் மக்களுக்கான இலவச சேவைகளை இல்லாதொழித்து அந்தத் துறைகளைத் தனியாரிடம் ஒப்படைப்பதிலும் ஆட்சியினர் குறியாய் உள்ளனர்.

அதேவேளை, இந்த மக்கள் விரோத வரவு - செலவுத் திட்டத்தில் அடுத்த ஏப்ரல் மாதத்தில் இருந்து அரச ஊழியர்களுக்குப் பத்தாயிரம் ரூபா சம்பள உயர்வு எனக் கூறி இருப்பது அப்பட்டமான ஏமாற்றும் மோசடியாகும்.

எனவே ரணில் விக்கிரமசிங்கவின் ஏகாதிபத்திய அடிவருடித்தனத்தையும் அவரின் வழமையான உழைக்கும் மக்கள் விரோதத்தையும் தெளிவாக வெளிப்படுத்தும் இந்த வரவு - செலவுத் திட்டத்தை மக்கள் உறுதியாக நிராகரிக்க வேண்டும் என்று எமது கட்சி வற்புறுத்துகிறது.– என்றுள்ளது.

# தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞன் சடலமாக மீட்பு!

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்துக்கு உட்பட்ட சேனைக் குடியிருப்பு பிரதான வீதியில் அமைந்துள்ள வர்த்தக கட்டடத்தின் தங்கும் அறையில் நேற்று (16) காலை தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் வழிகாட்டலில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பல்வேறு குற்றத் தடுப்பு பிரிவு பதில் பொறுப்பதிகாரி, மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

பின்னர் சம்பவ இடத்துக்குச் சென்ற கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம். சம்சுதீனின் உத்தரவின் பிரகாரம் மீட்கப்பட்ட சடலம் கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

22 வயதான கோகுலராஜ் சுமன்ராஜ் என்பவரே தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டவராவார்.

மேலதிக விசாரணைக்காக அம்பாறையில் இருந்து தடயவியல் பொலிஸார் அழைக்கப்பட்டு மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியாவில் கடத்தப்பட்டுள்ளார் இலங்கையைச் சேர்ந்த வர்த்தகர்!

## கடத்திய சந்தேகத்தில் பெண் உட்பட நால்வர் கைது



இலங்கை வர்த்தகர் ஒருவர் சென்னைக்கு வியாபாரத்துக்குச் சென்ற நிலையில் கடத்தப்பட்டுள்ளார். அவரைக் கடத்திச் சென்ற பெண் ஒருவர் உட்பட நான்கு சந்தேக நபர்கள் கைது செய் யப் பட்டுள்ளனர் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளி யிட்டுள்ளன.

தனது தந்தையைக் கடத்திய சிலர் அவரை விடுவிப்பதற்காகப் 15 லட்சம் இந்திய ரூபாவை கோரி அழைப்பு மேற்கொண்டனர் என்று கடத்தப்பட்டதாகக் கூறப்படும் நபரின் மகள் என தன்னை அடையாளப்படுத்திய பெண் ஒருவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

அதன்படி, மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமைய கடத்தப்பட்ட வர்த்தகர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில், சந்தேக நபர்களும் கைது செய்யப் பட்டுள்ளனர் என்று இந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஏவல் படையும் நீதிமன்றங்களும்

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரையில் இலங்கையின் பொலிஸ் துறை அவர்களுக்கு உரியதன்று. அதை அவர்களின் நம்பகமான பொலிஸ் பிரிவாகவும் அவர்கள் கருதவில்லை. அதற்கு நியாயமான காரணங்கள் உள்ளன.

இலங்கையில் இருப்பது நாட்டினதும் நாட்டு மக்களினதும் பொலிஸ் துறை என்பதிலும் பார்க்க, அதிகார பீடத்தில் இருக்கும் பௌத்த - சிங்களப் பேரினவாத மேலாண்மைச் சிங்கள தரப்புகளின் ஏவல் படையாகவே அது செயல்படுகின்றது என்பது தான் யதார்த்தம்.

அதனால் தமிழர் தாயகத்தில் நிலை கொண்டுள்ள பொலிஸாரைத் தங்களது காவலர்களாகப் பார்க்காமல் அவர்களை ஆக்கிரமிப்பு படையின் ஒரு பகுதியாக தமிழர்கள் கணக்கெடுக்கின்றார்கள்.

'ஒண்ட வந்த பிடாரி ஊர் பிடாரியை விரட்டிய தாம்' என்ற கதையாக பௌத்த - சிங்களப் பேரினவாத மேலாண்மைத் திமிர் ஆட்சியாளர்களின் ஏவல் படையாகியிருக்கும் பொலிஸ்துறை, இங்கு ஓரளவுக் கேனும் தனித்துவத்துடனும் நீதியாகவும் செயற்படும் தமிழர் தாயகப் பிரதேச நீதிமன்றங்களையும் அதே பாணியில் வழி நடத்த முலலுகின்றமை வேதனைக் குரியது.

மாவீரர் அனுஷ்டான காலம் நெருங்கி விட்டது. இனி என்ன? மாவீரர் நினைவேந்தல்களுக்குத் தடை விதிக்கக் கோரி தமிழர் தாயகத்தில் உள்ள நீதிமன்றங்கள் தோறும் பொலிஸ் தரப்புகள் விண்ணப்பங்களுடன் அலையும்.

பல நீதிமன்றங்களும் தனித்துவமாக இத்தகைய விடயங்களைக் கையாண்டு, ஒரே மாதிரியான நிலைப்பாடு எடுத்து, நீதியை ஒரு சீராக நடைமுறைப் படுத்தச் செய்வதை விடுத்து, பொலிஸ் கேட்ட தடை விண்ணப்பங்கள் எல்லாவற்றுக்கும் முதலில் தலையாட்டி, தடை உத்தரவுகளை வழங்கும்.

ஆனால், பாதிக்கப்பட்டோர் பின்னர் சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களில் முன்னிலையாகி அவர்கள் சார்பில் வாதங்கள் முன்வைக்கப்பட நீதிமன்றங்கள் உத்தரவுகளை நெறிப்படுத்தத் தொடங்கும். இது வழமையாக நடைபெறும் சட்டத் திருவிழாதான். இம்முறையும் ஏற்கனவே திருவிழா தொடங்கி விட்டது.

வடக்கில் ஒரு நீதிவான் நீதிமன்றம் நினைவேந்தலுக்குத் தடை விதிக்கும் உத்தரவை இன்று விடுத்துள்ளது.

ஆனால் இதே மாதிரி கோரிக்கையுடன் மட்டக்களப்பு மற்றும் கொக்கட்டிச்சோலைப் பொலிஸார் தனித்தனியாக மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் இன்று பகல் மனுதாக்கல் செய்து, அது நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது, அங்கு வேறு ஒரு வழக்குக்காக முன்னிலையாகி இருந்த ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இந்த மனுக்களை எதிர்த்து சட்டவாதம் செய்தார்.

மறைந்த ஒருவரை நினைவேந்தும் உரிமை உண்மையில் அடிப்படை உரிமை. அதை நீதிமன்றமும் சட்டமும் மறுக்கவோ, தடுக்கவோ கூடாது. மாறாக, அந்த உரிமையை நிலை நாட்டுவது பொலிஸாரினதும் நீதிமன்றங்களினதும் கடமை. அப்படித் தடுத்தல் சம்பந்தப்பட்ட பிரஜையின் நினைவேந்தல் உரிமையை மீறும் செயல் என்று சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

சுமந்திரனின் வாதத்தை அடுத்து, நினைவேந்தல் நடவடிக்கையை தடுத்து உத்தரவிடக் கோரும் பொலிஸ் கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருக்கின்றது.

ஆனால், தமிழர் தாயகத்தில் இருக்கும் எல்லா நீதிமன்றங்களுக்கும் இப்படி மாறி மாறி பதில் அளித்துத்தான் நியாயம் பெற வேண்டும், நீதித்துறை சுயாதீனமாக தன் நெறிமுறைகளை ஒழுங்குப்படுத்திக் கொள்ளாது என்றால் அது நீதித் துறைக்கு இழுக்கு.

பேரினவாதத்தின் ஏவல் துறையான பொலிஸின் பிழையான வழிகாட்டலுக்குத் துணை போகாமல், நீதித் துறை தனது தனித்துவத்தை தனித்துவமாக - சுயமாகவே - நிலைநிறுத்த வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

# சாய்ந்தமருது பாடசாலைக்கு நாபிர் நிதியத்தால் கதிரைகள்

(எம்.ஏ.ஏ.அக்தார்)



சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் (ஜீ.எம்.எம்.எஸ்) பாடசாலை நிறைவேற்று அபிவிருத்திக் குழுவின் செயலாளர் பொறியியலாளர் எம்.ஐ.எம். றியாஸ் விடுத்த கோரிக்கையை ஏற்று பாடசாலைக்கு விஜயம் செய்த நாபீர் பௌண்டேசன் தலைவரும் பொறியியலாளருமான உதுமான் கண்டு நாபிர் பாடசாலையின் பல தேவைகளைக் கேட்டறிந்ததோடு உடனடித் தேவையாக இருந்த ஒரு தொகுதி பிளாஸ்டிக் கதிரைகளைப் பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்தார்.

பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். இல்யாஸ் தலைமையில் இடம்பெற்ற கதிரைகள் கையளிக்கும் நிகழ்வில் உதவி அதிபர் எம்.ஏ.ஸி.எம்.நஜீம், ஆசிரியர்கள், மாணவர்கள், நிறைவேற்று அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023



"ஒரு மரத்தை நடவு செய்வது பிரபஞ்சத்தின் லயத்துடன் உங்களை இணைத்துக் கொள்வதற்கான எளிதான வழியாகும்."

அமிற் றே
(இந்திய ஆன்மீகக் குரு)



# அளம்பில் துயிலும் இல்லத்தில் நடைபெற்றது சிரமதானப் பணி!

அளம்பில் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு சிரமதான பணி இடம்பெற்றுள்ளது. அத்துடன் இராணுவத்திடம் இருந்து காணியை விடுவிக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களுக்கான உரிமைப் போரில் தமது உயிர்களை ஈகம் செய்த மாவீரர்களை போற்றி வணங்கும் மாவீரர் நாள் இவ்வாண்டும் கார்த்திகை 27 ஆம் திகதி தமிழ் மக்களால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதற்கமைய முல்லைத்தீவு மாவட்டத்தில் இலங்கை இராணுவத்தின் 24 ஆவது படைப் பிரிவால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அளம்பில் மாவீரர் துயிலும் இல்லத்தில் இவ்வாண்டுக்கான மாவீரர் நாள் நிகழ்வுகள் செய்வதற்கான சிரமதான பணிகள் அளம்பில் மாவீரர் துயிலும் இல்ல பணிக்குழுவினரால் நேற்று முன்தினம் (15) ஆரம்பிக்கப்பட்டது.

முன்னதாக மாவீரர்களுக்கு ஈகைச் சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தியதை தொடர்ந்து சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டன.





# கல்லம்பத்தைக் கிராமத்துக்கு 12 குழாய்க் கிணறுகள் அமைப்பு

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கம் கடந்த மூன்று மாத காலத்தில் 120 அடி ஆழமான 12 குழாய்க் கிணறுகளை கல்லம்பத்தைக் கிராமத்துக்கு அமைத்துக் கொடுத்துள்ளது.

கல்லம்பத்தை , குச்சவெளிப் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள ஒரு மீள் குடியேற்ற எல்லைக் கிராமமாக காணப்படுகின்றது. திருக்கோணமலை நகரத்திலிருந்து வடபுறமாக 52 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இந்தக் கிராம மக்கள் 1985 காலப் பகுதியில் முற்றாக இடம் பெயர்ந்து அண்மைக் காலத்தில் பல்வேறு வளப்பற்றாக் குறையுடன் மீள்குடியமர்ந்து வருகின்றனர்.

குறிப்பாக இந்த ஊரில் வாழும் மக்கள் குடி தண்ணீர் இன்றி மிகவும் சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர். இந்தச் சிக்கலைத் தீர்க்கும் வகையில் திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கம் கடந்த மூன்று மாத காலத்தில் 120 அடி ஆழமான 12 குழாய்க் கிணறுகளை கல்லம்பத்தையில் அமைத்துக் கொடுத்துள்ளது.



இந்தக் குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டதன் மூலம் கல்லம்பத்தை மக்களது குடி தண்ணீர் பிரச்சனை தீர்க்கப்பட்டுள்ளது. அத்துடன் சிறு தோட்டப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதன் மூலம் இவர்களது சமூக – பொருளாதாரம் மேம்படும் நிலையும் உருவாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இயற்கையின் சமிக்ஞைகளை கவனித்தால் இழப்புக்களை தவிர்த்துக் கொள்ள முடியும்!

## கிழக்கு பல்கலை. புவியியல் விரிவுரையாளர் கிருபைராஜா தெரிவிப்பு

(எஸ்.கீதபொன்கலன், அப்துல்சலாம் யாசீம்)

இயற்கையின் சமிக்ஞைகளை அலட்சியம் செய்யாது கருத்தில் கொண்டு முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் பெருமளவான இழப்புக்களை தவிர்த்துக் கொள்ளலாம்.

இவ்வாறு கிழக்கு பல்கலைக்கழக புவியியல் சிரேஷ்ட விரிவுரையாளர் ஆர்.கிருபைராஜா தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கையில் சில வருடகாலமாக தொடர்ச்சியான நிலநடுக்கங்கள் பதிவாகி வருகின்றன. இந்த இயற்கை சமிக்ஞைகளை கவனத்தில் கொண்டு நாம் சில முன்னாயத்த நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் பெருமளவான பாதிப்புகளில் இருந்து எம்மை நாம் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

கரையோரத்தை அண்டியுள்ள பகுதிகளில் விசேட கவனம் செலுத்துவதோடு மாணவர்கள் மத்தியில் அனர்த்தக் கல்வி தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

2004ஆம் ஆண்டு சுனாமி ஆழிப் பேரலை அனர்த்தத்தில் இருந்து இலங்கை மக்கள் 100 வீதம் மீளாத நிலையில் மீண்டுமொரு அனர்த்தத்தை எதிர்கொள்வதற்கான கட்டமைப்பை சமுதாயத்தின் மத்தியில் உருவாக்க வேண்டும்.

விஞ்ஞான பூர்வமாக சான்றாதாரங்களின் அடிப்படையில் நோக்குமிடத்து, இந்தியத் தகட்டில் புதிய உப தகடொன்றின் தோற்றமும், இலங்கையிலும், அதனை அண்டிய கடல் பிராந்தியங்களிலும் உள்ளகத் தகடுகள் மற்றும்



குறைகளின் விருத்தி இன்று தோன்றியுள்ள நிலநடுக்க நிலைமைகளுக்கு பிரதான காரணங்களாகக் காணப்படுகின்றன.

குறிப்பாக இலங்கையின் கிழக்கே விருத்தியடைந்துள்ள குறைகள் உதைப்புக் குறை சார்ந்தவையாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

நிலநடுக்கங்களையும் அதனோடு இணைந்ததான சுனாமி போன்றவற்றையும் உருவாகுவதற்கு வேண்டிய அடிப்படையான புவிச்சரிதவியல் நிலைமைகள் என்னவோ அவை இலங்கையின் கிழக்கு, தென்கிழக்கு, தென்மேற்குப் ஆகிய பிராந்தியங்களிலும் விருத்தி பெற்றுள்ளன.

இத்தகைய பின்னணியிலேயே திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, ஹம்பாந்தோட்டை, கொழும்பு பிரதேசங்களை அண்மித்து நிலநடுக்கங்கள் அடிக்கடி தோன்றுகின்றன.

கடந்த 2007.07.18 ஆம் திகதி இலங்கையில் தென்மேல் கரையிலிருந்து 300 கிலோ மீற்றர்களுக்கு அப்பால் வங்காள விரிகுடாவில் 5.2 ரிச்டர் அளவுத் திட்டத்தில், கடல் அடித்தளத்தில் இருந்து 10 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட நில அதிர்வை ஹம்பாந்தோட்டையில் இருந்து யாழ்ப்பாணம் வரையான கரையோரத்தில் மக்கள் உணர்ந்தனர். திஸ்ஸமகாராம என்னும் இடத்தில் பல வீடுகள் பகுதியளவில் சேதமடைந்தன.

இதனைத் தொடர்ந்து கடந்த 29.12.2021 மட்டக்களப்பு கரையோரத்திலிருந்து 300 கிலோ மீற்றர் கடலுக்குள் 4.3 ரிச்டர் அளவிலான நிலநடுக்கமும், 4.6 ரிச்டரில் கடந்த 11.09.2023 அன்று மட்டக்களப்புக்கு வட கிழக்காக 310 கிலோ மீற்றர் தொலைவில் வங்காள விரிகுடா கடலடித்தளத்தில் மீண்டுமொரு நிலநடுக்கமும் பதிவாகின.

இவை மட்டுமன்றி, 15.09.2018 ஆம் திகதி அன்று திருகோணமலை துறைமுகத்தை அண்டியும், 19.02.2021 ஆம் திகதி அன்று பாணமை கடல் பிராந்தியத்திலும், 13.07.2022 கல்முனை கடற்கரையிலிருந்து 300 கிலோ மீற்றர்கள் கடலடித் தளத்திலும், 19.03.2023 அன்று திருகோணமலையின் கோமரங்கடவல பகுதியிலும் நில அதிர்வுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சமீபத்தில் 2023.11.12 ஆம் திகதி மொரவெவ பகுதியில் 3.5 ரிச்டரில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது. அதனைத் தொடர்ந்து 2023.11.14 கொழும்புக்கு தென்கிழக்கே அமைந்த கடல் பிராந்தியத்தில் 6.1 ரிச்டரில் பாரிய நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

இந்த நிலையில் சமுதாய மட்டத்திலான முன்னாயத்தம் தொடர்பில் முயற்சிகளை முன்னெடுப்பது அவசியம்.- என்றார்.

# கிட்டி சிறுவர் படையணிக்கு தரம் ஒன்று மாணவர்கள்

(அபு ஷைரீன் )

சென். ஜோன் அம்புலன்ஸ் கிட்டி சிறுவர் படையணிக்கு வாழைச்சேனை வை. அஹமட் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் தரம் - 1 மாணவர்கள் உள்வாங்கப்பட்டனர்.

தெரிவு செய்யப்பட்ட நூறு மாணவர்களுக்கான பதக்கம் பொறிக்கப்பட்ட கோலுடைகளை அணிவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (15) இடம்பெற்றது.

இதேவேளை, பாடசாலையில் கவின் கலை சூழல் அழகுபடுத்தப்படுவதால் அண்மைக் காலமாக இடைவிலகல் குறைக்கப்பட்டு மாணவர்கள் அனுமதி வீதமும் அதிகரித்து வருகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் சிறுவர் விளையாட்டு இணைப்பாளரும்



சென். ஜோன் அம்புலன்ஸ் மாவட்ட ஆணையாளருமான எஸ்.எல்.ஏ.எச். இனாமுல்லாஹவின் ஆலோசனையிலும் வித்தியாலய அதிபர் ஷல்மானுல் ஹரீஸின் வழிகாட்டலிலும் இவ்வாறான செயற்பாடுகள் பாடசாலையில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# கிளி. உற்பத்தித்திறன் சார் செயற்பாடுகளை பார்வையிட்ட முகாமைத்துவ உத்தியோகத்தர்!

(அ.அஸ்வர்)

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் உற்பத்தித்திறன் சார் செயற்பாடுகளை பார்வையிட்ட வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் கற்கை நெறியைப் பயிலும் அரச உத்தியோகத்தர்கள் கள விஜயமொன்றை மேற்கொண்டிருந்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் பத்து நாள்களைக் கொண்ட கற்கை நெறியைக்கிளிநொச்சிமாவட்டத்தின்பல்வேறு திணைக்களங்களைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர்கள் கற்று வருகின்றனர்.

பயிற்சித் திட்டத்தின் ஒரு பகுதியான உற்பத்தித் திறன் கற்கையின் கள அனுபவங்களை செயன்முறை ரீதியாகப் பெற்றுக் கொள்ளும் முகமாகவே குறித்த களவிஜயம் அமைந்திருந்தது.

கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அரச அதிபர் றூபவதி கேதீஸ்வரனைச் சந்தித்த உத்தியோகத்தர்கள் தமது கள விஜயத்தின் நோக்கம் தொடர்பாக கலந்துரையாடினர்.

இதன்போது மாவட்ட அரச அதிபர், கிளிநொச்சி மாவட்ட செயலகம் கடந்த இரு வருடங்களாகத் தேசிய உற்பத்தித் திறன் போட்டியில் முதலாமிடத்தை பெற்றுக்கொண்ட அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்.

இறுதியாக உற்பத்தித்திறன் சார்ந்த ஆக்க பூர்வமான விடயங்கள் தொடர்பாக மேலதிக அரச அதிபர் எஸ். முரளிதரனுடன் கலந்துரையாடினர்.

இந்த நிகழ்வில் மாவட்ட மேலதிக அரச அதிபர்(காணி) இ.நளாஜினி, பிரதம கணக்காளர் சி.கஜேந்திரன், வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிலையத்தின் இணைப்பாளர் பி.மகிந்தினி, உற்பத்தித்திறன் பிரிவின் உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிலைய கற்கை நெறி பயிலும் அரச உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# குருநாகலை மாணவருக்கு விளையாட்டு மேலங்கிகள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

குருநாகலை, கெக்குணுகல்ல முஸ் லிம் தேசிய பாடசாலையில் சகல வித மான விளையாட்டுக்களிலும் பங்கு பற்றக் கூடிய மாணவர்கள் பயன் படுத்தும் வண்ணம் ஜனா உள்ளக விளையாட்டு அகடமியின் முகாமைத்துவ பணிப்பாளர் ஏ.பி.எம்.றிஹாம் மேலங்கிகளை அன்பளிப்பு செய்துள்ளார்.

பாடசாலை அதிபர் ஏ.எம்.ஏ.றிஸாத் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் உடற்கல்வித்துறை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகளும் கலந்துகொண்டனர்.






# இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் திருமலை மாவட்ட அலுவலகம் திறப்பு

(எஸ்.கீதபொன்கலன்)

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் திருகோணமலை மாவட்ட புதிய தலைமை அலுவலகம் புதன் கிழமை கூட்டுத்தாபனத்தின் பிரதம நிறை வேற்று அதிகாரி சந்தன அலுத் கமகேயால் திறந்து வைக்கப்பட்டது. புதிய காப்புறுதி விண்ணப்பங்களும் வாடிக்கையாரிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டன.





# சாய்ந்தமருது ஆஸ்பத்திரியில் நீரழிவு தின விழிப்புணர்வு நிகழ்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

நீரழிவு சிகிச்சைக்கான அணுகல் இப்போது இல்லா விட்டால் எப்போது ? எனும் தொனிப்பொருளில் சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை ஒழுங்கு செய்திருந்த உணவுக் கண்காட்சியும், விழிப்புணர்வுக் கருத்தரங்கும் வைத்தியசாலை வளாகத்தில் இடம்பெற்றன.

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை பதில் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் சனூஸ் காரியப்பர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நீரழிவு நோயிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கான உணவுப் பழக்க வழக்கங்கள் தொடர்பான கண்காட்சியும் பொது மக்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் இடம்பெற்றன.



# இழுவைப் பாதை, இறங்குதுறை புனரமைப்பு

(எஸ்.கீதபொன்கலன்)

வேள்ட் விஷன் நிறுவனம் மற்றும் வெருகல் பிரதேச சபையின் நிதிப் பங்களிப்பின் மூலமாக புன்னையடி இழுவைப் பாதை, இறங்குதுறை என்பன புனரமைப்புப் செய்யப்பட்டுள்ளன.

இவை மக்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டன. இந்த நிகழ்வில் வெருகல் பிரதேச சபையின் செயலாளர், வேள்ட் விஷன் நிறுவனத்தின் இணைப்பாளர், வெருகல் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் , வெருகல் பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பில் நீரிழிவுதின நிகழ்வு

(பழுவூரான்)

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு பாலமீன் மடு பிரதேச வைத்திய சாலை சுகாதார உத்தியோகத்தர்களின் அனுசரணையுடன் நீரிழிவு தின நிகழ்வு மட்டக்களப்பு ஜெயந்திபுரம் சிரேஷ்ட பிரஜைகள் சங்க மண்டபத்தில் இடம்பெற்றது .

இதன்போது 40 சிரேஷ்ட பிஜைகள் இரத்தம் பரிசோதிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதேவேளை உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்றும் இடம் பெற்றது. ஊர்வலத்தில் பிரதேச மக்கள் , சுகாதாரத்துறை உத்தியோகத்தர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர் .





# ஆடை வடிவமைப்பில் தொழில்தகைமை சான்றிதழ்கள் தேசிய ரீதியில் வழங்கல்

**(எஸ். நிதர்ஷன்)**

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் இயங்கும் மகளிர் அபிவிருத்தி நிலையங்களில் மனைப் பொருளியலில் டிப்ளமோ கற்கைநெறியைப் பூர்த்தி செய்து ஆடை வடிவமைப்பில் தேசிய தொழில் தகைமையை மேற்கொண்டவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்று (16) நடைபெற்றது.




சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் பொன் விழா மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் த.சசீலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸ், வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

வடக்கு மாகாணத்தில் 302 பேருக்கு இதன்போது சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டது.



# இலவச நீர் இணைப்புக்கு உதவிகள் வழங்கல்

**(எம்.எப்.என்)**

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தீகவாபியில் வசிக்கும் வறிய குடும்பத்துக்கு இலவச நீர் இணைப்புக்கு உதவி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டை இன்று (17) பிரதேச செயலகத்தில் வைத்து சமூர்த்தி கருத்திட்ட உதவி முகாமையாளரும் ஊடகவியலாளருமான நவாஸ் வழங்கினார்.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட தொழிற்சங்க தலைவர் கபீர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் பாயிஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதற்கான நிதியைத் தனவந்தர் ஒருவர் வழங்கியுள்ளார்.

# வாழ்வாதார உதவிகள் வழங்கல்

சந்நிதியான் ஆச்சிரமத்தால் ஒரு லட்சத்து 35 ஆயிரம் ரூபா பெறுமதியில் வாழ்வாதார உதவி வழங்கப்பட்டுள்ளது.

கொடிகாமம் வடக்கு, கொடிகாமத்தை சேர்ந்த குடும்பம் ஒன்றுக்கு மேற்பட்ட வாழ்வாதாரச் செயற்றிட்டத்துக்கு அமைவாக இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது.

இதன்போது சுயதொழில் ஊடான வருமானத்தை பெற்றுக் கொள்வதற்காக பசு மாடு கன்றுடன் வழங்கப்பட்டது.

இந்த உதவித் திட்டத்தினை ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் வழங்கினார்.




வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்."
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PIKUP & DROPING
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
BEST FOR
VANRENT
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882


सत्यमेव जयते
இந்திய துணைத் தூதரகம்
யாழ்ப்பாணம்
நல்லதோர் குடும்பம்
சிறப்புரை
திரு. மோகனசுந்தரம்
நகைச்சுவை பேச்சாளர்
இடம் : யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையம்
காலம் : 18 நவம்பர் 2023 (சனிக்கிழமை)
நேரம் : மாலை 06.00 மணி
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
அனுமதி இலவசம்


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
+94 703 563213
+94 21 222 8358
www.jride.lk
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
நாங்கள் தயார் நீங்கள் தயாரா?
WE ARE READY ARE YOU READY?
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள். இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!

# சுரங்கத்தில் சிக்கிய நாற்பது தொழிலாளர்களையும் இராட்சத இரும்புக் குழாய் மூலம் மீட்க நடவடிக்கை



உத்திரகாண்ட் மாநிலம் உத்திர காசியில் சுரக்கப்பாதையில் ஏற்பட்ட இடிபாட்டில் 40 தொழிலாளர்கள் சிக்கிக் கொண்டுள்ளனர். சுரங்கத்துக்குள் சிக்கி இருக்கும் அவர்களை மீட்கப் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன.

அவர்களை மீட்கும் பணி 6 ஆவது நாளாக நடந்து வருகிறது. சுரக்கத்தில் சிக்கிய தொழிலாளர்களை மீட்க புதிய யுக்தியை மீட்பு படையினர் மேற்கொண்டு வருகின்றனர். அதன்படி சுரக்கத்துக்குள் 60 மீட்டர் நீளமும், 900 மில்லி மீட்டர் விட்டமும் கொண்ட இரும்பு குழாய் சுரங் கத்துக்குள் செலுத்தப்படுகிறது.


தொழிலாளர்கள் குழாயின் உள் வழியாக ஏறி தப்பி வருவதற்காக அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மேலும் ஒரு குழாயும் சுரங்கத்துக்குள் செலுத்தப்படுகிறது. அதன் வழியாக சுரங்கத்துக்குள் சிக்கி உள்ள தொழி லாளர்களுக்கு உணவு வழங்கவும், காற்றை சப்ளை செய்யவும், உடல் நலம் பாதிக்கப்படும் தொழிலாளர் களுக்கு மருந்து கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த குழாய்கள், தொழிலாளர்கள் இருக்கும் பகுதி வரை செலுத்துவதற்காக குழி தோண்டப்பட்டு வருகிறது. அந்த பணி முடிந்து குழாய் செலுத்தப்பட்டதும் அதன் வழியாக தொழிலாளர்கள் தப்பி வரும் வகையில் பணி துரிதமாக மேற் கொள்ளப்படுகிறது.

இந்த பணி வேகமாக நடப்பதால் சுரங்கத்திற்குள் சிக்கியுள்ள தொழி லாளர்கள் விரைவிலேயே மீட்கப் படு வார்கள் என எதிர்பார்க்கப்படுகி றது.

# இலங்கையை ஒட்டி வங்கக்கடலில் வளிமண்டலத்தில் கீழடுக்கு சுழற்சி

## 'மிதிலி' புயலால் சில தினங்கள் மழை பொழியும்




இந்தியாவை ஒட்டி வங்கக்கடலில் கடந்த செவ்வாய்க்கிழமை குறைந்த காற்றழுத்தம் தாழ்வு பகுதி உருவானது. அது வலுப்பெற்று வடக்கு மற்றும் வடமேற்கு திசைகளில் நகர்ந்தது. நேற்று முன்தினமும், நேற்றும் இந்த குறைந்த காற்றழுத்தம் தொடர்ந்து வலுப்பெற்ற தால் புயல் சின்னமாக மாறியது. நேற்று அது ஆந்திர கடலோர பகுதிகளில் நிலைக்கொண்டிருந்தது.

அந்த காற்றழுத்தத்தாழ்வு மண்டலம் நேற்று காலை 5.30 மணியளவில் ஆழ்ந்த காற்றழுத்தத்தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றது. விசாகப்பட்டினத்தில் இருந்து சுமார் 420 கி.மீ. கிழக்கு தென் கிழக்கே நிலைகொண்டிருந்தது.

அந்த புயல் சின்னம் நேற்று வடக்கு, வடகிழக்கு திசை நோக்கி நகர்ந்தது. நேற்று இரவு அது ஒடிசா கடல் பக்கம் நிலைக்கொண்டிருந்தது. அந்த புயல் சின்னம் மேலும் வலுப்பெற்று மீண்டும் வடமேற்கு திசைக்கு மாறி செல்லும் என்று வானிலை ஆய்வு நிலையம் கூறி இருந்தது.

இன்று அதிகாலை 5.30 மணி அள வில் அந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் மேலும் வலுப்பெற்று புயலாக மாறியது. இந்தப் புயலுக்கு 'மிதிலி' என்று பெயர் சூட்டப்படும். இந்தப் பெயரை மாலத்தீவு பரிந்துரைத்துள்ளது.

இது வடக்கு-வடகிழக்கு திசையில் நகர்ந்து கொண்டிருக்கிறது. நாளை (18 ஆம் திகதி) அதிகாலை வங்கதேச கடற்கரையையொட்டி நகர்ந்து மோங்லா - கேப்பு பாராவு பகுதிகளுக்கு இடையே கரையை கடக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு கணித்துள்ளது.

இதற்கிடையே, தென்மேற்கு வங்கக் கடல், இலங்கையையொட்டி, வங்கக்கட லில் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நில வுகிறது. இதன் காரணமாக தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிக ளில் இன்று முதல் 22-ந்தேதி வரை 6 நாட்கள் பல்வேறு இடங்களில் பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது.

குறிப்பாக, இன்று (1ஆம் திகதி) கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென் காசி, தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களிலும், நாளை மறுநாள் (19ஆம் திகதி) கோவை மாவட்ட மலைப் பகுதிகள், நீலகிரி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாத புரம், சிவகங்கை, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களிலும் பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னை மற்றும் புற நகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான முதல் மிதமான மழை பெய்யக் கூடும்.

வடமேற்கு, வடகிழக்கு வங்கக்கடல், மேற்கு வங்க கடலோரப் பகுதிகளில் இன்று (17-ந்தேதி) சூறாவளிக்காற்று மணிக்கு 80 கி.மீ. வேகத்தில் வீசக்கூடும். மத்திய வங்கக்கடல் பகுதிகளில் சூறா வளிக்காற்று மணிக்கு 55 கி.மீ. வேகத் தில் வீசக்கூடும். எனவே, மீனவர்கள் அந்தப் பகுதிகளுக்கு மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம். - இப்படி வானிலை ஆய்வு நிலையம் தெரிவித்துள்ளது.



# காசாவில் கட்டட இடிபாடுகளில் ஆயிரக்கணக்கான சடலங்கள்!

## கைகளால் தோண்டி எடுக்கும் அவலம்

பலஸ்தீனத்தின் ஹமாஸ் அமைப்பினரை ஒழிக்கும் வகையில் காசா மீது இஸ்ரேல் இராணுவ நடவடிக்கையை தொடங்கியது. கடந்த ஒரு மாதமாக காசா மீது இஸ்ரேக் இடைவிடாது தாக்குதல் நடத்தி வருகிறது. போர் தொடங்கிய நேரத்தில் ஏவுகணைகள் மூலம் காசாவை தாக்கியது. இடைவிடாத வான் தாக்குதலுக்கு உள்ளான காசா உருக்குலைந்துள்ளது.

எங்கு பார்த்தாலும் கட்டட இடிபாடுகளாகக் காட்சியளிக்கின்றன.

தற்போது இஸ்ரேல் தரைவழி தாக்குதல் நடத்தி வருகிறது.

இதற்கிடையே இரண்டு முறை மட்டுமே மனிதாபிமான உதவிகள் காசா சென்றடைய இஸ்ரேல் அனுமதி அளித்தது.

இதனால் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக அனைத்து பணிகளும் தொய்வடைந்துள்ளன. இடிபாடுகளுக்குள் சிக்கி உயிரிழந்தவர்களின் உடல்களை உறவினர்கள் மீட்க முடியாமல் திணறி வருகிறார்கள். ஜே.சி.பி. போன்ற கனரக வாகனங்கள் எரிபொருள் இல்லாமல் இயங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பெரும்பாலானோர் இரும்பு கம்பிகளை கொண்டு இடிபாடுகளை நீக்கி வருகிறார்கள். பலர் எந்தவித உதவிப் பொருள்களும் இல்லாததால், கைகளால் இடிபாடுகளை அப்புறப்படுத்தி உடல்களை வெளியே எடுக்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. கட்டட இடிபாடுகளுக்குள் பலர் சிக்கி உயிரிழந்து சில தினங்கள் ஆகியுள்ள நிலையில் துர்நாற்றம் வீச ஆரம்பித் துள்ளது.

இதையெல்லாம் சகித்துக் கொண்டு எப்படியாவது உறவினர்களின் உடல்களை மீட்க வேண்டும் என பொதுமக்கள் பரிதவித்து வருவது வேதனைக்குரியதாக உள்ளது.

# காசா மருத்துவமனையில் கண்டெடுக்கப்பட்ட லாப்டொப்பில் பணயக் கைதிகளின் படங்கள்

வடக்கு காசா பகுதியில் அமைந்த பெரிய மருத்துவமனையாக உள்ள அல்–ஷிபா மருத்துவமனையை இஸ்ரேல் படைகள் கைப்பற்றியுள்ள நிலையில் , அந்த மருத்துவமனையில் கண்டெடுக்கப்பட்ட லாப் டொப்பில், பணய கைதிகளின் வீடியோக்கள் மற்றும் படங்கள் காணப்பட்டன என இஸ்ரேல் பாதுகாப்பு படையினர் தெரிவித்தனர்.

இதுபற்றி இஸ்ரேல் பாதுகாப்பு படை வெளியிட்ட அறிக்கையில் –

சில கட்டடங்களைச் சோதனை செய்ததில், ஆயுதங்கள், அக்டோபர் 7 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய தகவல், இராணுவ தொழில் நுட்பங்கள் மற்றும் இராணுவ சாதனம், தலைமையகங்கள் உள்ளிட்டவை பற்றிய உளவுத் தகவல்கள் என



ஹமாஸ் அமைப்புக்கு உரிய அனைத்து வகையான விடயங்களும் இருந்தன எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணய கைதிகளாக கடத்தப்பட்டவர்களுடன் தொடர்புடைய தகவல் மற்றும் ஆவணங்களும் கணினிகளில் இருந்தன. அவற்றை சோதனைக்காகவும் மற்றும் ஆய்வுக்காகவும் அனுப்பி வைத்திருக்கிறோம் என அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கின்றது.



# முருகனின் விரதங்களில் ஒன்று கந்தஷ்டி!

■ ஆர்.நடராஜன் ஹரன்

அறிவுவளர்ச்சிக்கு விஞ்ஞானம் உதவுவதைப் போன்று மன வளர்ச்சிக்கு சமயம் அடிகோலுகின்றது. இறைவன் ஒருவன், அவன் மக்களின் தந்தை என்றெல்லாம் போதிப்பதன் மூலம் அன்பு, சகோதரத்துவம் போன்ற ஜீவ ஊற்றுகளை அருளி மக்களின் வாழ்வு நலம் பெறச் சமயம் உதவு கின்றது. நல்லவர்களைப் பாதுகாக்கவும் தீயவர்களை அடக்கவும் தர்மத்தை நிலை நாட்டவும் யுகந்தோறும் இறைவன் அவதாரம் செய்தருளுகின்றான்.

சஷ்டி விரதம் ஐப்பசி மாத தீபாவளி அமாவாசையின் பின் அதாவது வளர் பிறை பிரதமை முதல் 13 ஆம் திகதி ஆரம்பித்து, ஆறாம் அல்லது ஐந்தாம் நாளான சஷ்டி திதி வரை 19ஆம் திகதி வரையான ஆறு தினங்களும் நோற்கப்படும் முருகப் பெருமானுடைய சிறப்பான நோன்பாகும்.

குழந்தைப் பாக்கியம் வேண்டுபவர்கள் கந்தசஷ்டி விரதம் இருந்தால் முருகனே குழந்தையாக அவதாரம் செய்வார் என்பது அசைக்க முடியாத நம்பிக்கை. இதைத்தான் சஷ்டியில் இருந்தால் அகப்பை (கருப்பை)யில் வரும் என்ற பழமொழியாக கூறுவார்கள்.

முசுகுந்தச் சக்கரவர்த்தி, வசிஷ்ட முனிவரிடம் இவ்விரதம் பற்றிக் கேட்டறிந்து கடைப்பிடித்துப் பெரும் பயன் அடைந்தாராம். முனிவர்கள், தேவர்கள் உள்ளிட்ட பலரும் கடைப்பிடித்த விரதம் இது.

முருகன் கோயில் உள்ள எல்லா இடங்களிலும் கந்த சஷ்டி விரதம் ஒரு பெருவிழாவாக நடக்கும். ஆறுபடை வீடுகளான திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், பழனி, சுவாமிமலை, திருத்தணிகை, பழமுதிர்ச்சோலையிலும், இலங்கையில் உகந்தை, திருக்கோவில், தாந்தாமலை, சித்தண்டி, நல்லூர், சந்நிதி, கதிரமலை (கதிர்காமம்), மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்களிலும் மிகவும் சிறப்பாக இவ்விழா நடைபெற்று வருகின்றது.

அறியாமை என்னும் அஞ்ஞான இருளை அகற்றி, மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற பரம்பொருளின் முக்திப் பேரருளை அடைவதற்காகச் சைவப் பெருமக்களால் அனுஷ்டிக்கப்படும் விரதங்களுள் தலையாயது கந்தசஷ்டி விரதம்.

முருகனுக்கு உரிய விரதங்கள் மூன்று. அவையாவன வெள்ளிக்கிழமை (வாரம்) விரதம், கார்த்திகை (நட்சத்திரம்) விரதம், கந்த சஷ்டி (திதி) விரதம் என்பனவாகும். வல்வினை நீக்கி, வரும் வினை போக்கி, செல்வமும் செல்வாக்கும் தந்து அழகும், அறிவும் தந்திடும் வள்ளி மணாளனை, வடிவேலனை வழிபடும் விரதங்களில் மிகவும் சிறந்தது இந்தக் கந்தசஷ்டி விரதமாகும்.

கந்த சஷ்டியாகிய ஐப்பசி மாத சுக்கில பட்ச சஷ்டி முதல் அந்த ஆண்டு முழுவதும் வரும் 24 சஷ்டிகளிலும் இவ் விரதம் கடைபிடிக்கப்பட வேண்டும். கந்த சஷ்டி தினத்துக்கு முன்வரும் பிரதமை முதல் ஆறு நாள்களும் உமிழ் நீரும் உள்ளே விழுங்காதவாறு நோன்பிருந்து இவ்விரதத்தை இருப்பது ஒருமுறை.

அவ்வாறு இயலாதவர்கள் அந்நாள்களில் ஒருமுறை வீதம் ஆறு மிளகையும் ஆறு கை நீரையும் அருந்தலாம். உயிர் உணர்ச்சி வளர்க்கும் விரதம் இது. எனவே உப்பு நீர், எலுமிச்சம் பழச்சாறு, நாரத்தம் பழச்சாறு, இளநீர் முதலிய வற்றை கந்த சஷ்டி விரதம் இருப்பவர்கள் அருந்தக்கூடாது.

விரத நாள்களில் அதிகாலையில் எழுந்திருந்து, நாட்கடன்களை முடித்து, திருநீறணிந்து முருகவேலைத் தியானித்துப் பின் நீராடி, தோய்த்துலர்ந்த இரு ஆடைகளை அணிந்து, தம்பத்திலும், விம்பத்திலும், கும்பத்திலும் முருகவேளை வழிபட்டு இரவில் நெய்யில் சமைத்த மோதகத்தை நிவேதித்துப் பூசிக்க வேண்டும்.

ஏழாம் நாள் காலை விதிப்படிப் பூசித்துக் கந்தன் அடியார்களுடன் அமர்ந்து பாரணை செய்தல் வேண்டும் என்று கந்த புராணம் விதிக்கின்றது.

கந்தவேள் சூரபத்மனை வெற்றி கொண்ட நாளே கந்த சஷ்டி. நமது உள்ளத்தில் ஆட்சி செய்து வாழும் காமம் முதலிய சூரபதுமனை முருகவேளின் ஞான வேலால் அழித்து, பேரின்பம் எய்தும் குறிப்பே சூரசம்ஹாரத்தின் பொருளாகும்.

தனு, கரண, புவன, போகங்கள் அனைத்தையும் படைத்தலும், காத்தலும், அழித்தலும் இறைவனது இடையறாத திருவிளையாடல்கள். இறைவனை உணர்ந்து அவனைச் சரணடைந்தால் அழிவில்லாத பேரின்பம் அடையலாம் என்பது சமயங்கள் காட்டும் பேருண்மை. இறைவனது திவ்ய அவதாரத்தையும் செயலையும் யாரொருவர் உள்ளபடி அறிகின்றார்களோ அவர்கள் மீண்டும் பிறவாமல் இறைவனையே அடைந்து விடுகிறார்கள் என்று கீதையில் கிருஷ்ணபகவான் கூறியுள்ளார்.

தெய்வ அவதாரங்களில் தீய சக்திகளை அடக்கி நல்லவர்களைக் காத்தார்கள் என்றால் இச்செயல்கள் தீமைகளை நீக்கி நன்மைகளையே செய்து மக்கள் உய்ய வேண்டும் என்று போதிப்பதற்கே நிகழ்ந்தன என உணர்ந்து பக்தியுடன் வாழ்ந்து இகபர நலன்களை அடைய முயலவேண்டும். இத்தகைய அவதார இரகசியத்தை விளக்கி மக்கள் உய்வதற்கு உகந்த பெருவழிகளை விளக்கிக் காட்டுவதே ஆறுமுகப் பெருமானின் அவதாரம்.

வசிட்ட மாமுனிவர் முசுகுந்தச் சக்கரவர்த்திக்கு சஷ்டி விரத மகிமையையும் வரலாற்றையும் விதிமுறைகளையும் உபதேசித்த பெருமையையுடையது. அரசர்கள், தேவர்கள், முனிவர்கள் பலரும் இந்த விரதம் அனுஷ்டித்து வேண்டிய வரங்களைப் பெற்றதோடு, இம்மை இன்பம், மறுமை இன்பம் ஆகியவற்றை பெற்றனர்.

**இவ்விரதம் பற்றிய புராணக் கதை**

பிரம்மாவுக்குத் தக்கன், காசிபன் என்னும் இரு புதல்வர்கள் இருந்தனர். இவர்களுள் தக்கன் சிவனை நோக்கித் கடுந்தவம் புரிந்து பல வரங்களைப் பெற்றிருந்த போதிலும் இறுதியில் சிவனால் தோற்றுவிக்கப் பெற்ற வீரபத்திரக் கடவுளால் கொல்லப்பட்டார். காசிபனும் கடுந்தவம் புரிந்து சிவனிடம் இருந்து மேலான சக்தியைப் பெற்றான். ஒருநாள் அசுரர்களின் குருவாகிய சுக்கிரனால் (நவக்கிரகங்களுள் வெள்ளியாக கணிக்கப்படுபவர்) ஏவப்பட்ட மாயை என்னும் பெண்ணின் அழகில் மயங்கி தான்பெற்ற தவ வலிமை எல்லாவற்றையும் இழந்தான்.

இதனைத் தொடர்ந்து காசிபனும் மாயை என்னும் அசுரப் பெண்ணும் முதலாம் சாமத்தில் மனித உருவத்தில் இணைந்து மனிதத் தலையுடன் கூடிய சூரனும், இரண்டாம் சாமத்தில் சிங்க உருவில் இருவரும் இணைந்து சிங்க முகத்துடன் கூடிய சிங்கனும், மூன்றாம் சாமத்தில் யானை உருவில் இணைந்து யானை முகத்துடன் கூடிய தாரகனும், நான்காம் சாமத்தில் ஆட்டின் உருவத்தில் இருவரும் இணைந்து ஆட்டுத் தலையுடன் கூடிய அசமுகி என்னும் அசுரப் பெண்ணும் பிறந்தனர்.

மாயை காரணமாக தோன்றிய இந்த நால்வரும் ஆணவ மிகுதியால் அகங்கார மமகாரம் (செருக்கு) கொண்டு காணப்பட்டனர். இவர்களுள் சூரபதுமன் சிவனை நோக்கிக் கடுந் தவம் புரிந்து

**(17ஆம் பக்கம் பார்க்க)**

# முருகனின் விரதங்களில் ஒன்று கந்தஷ்டி!

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

108 யுகம் உயிர்வாழவும் 1008 அண்டம் அரசாளும் வரத்தையும், இந்திரஞாலம் எனும் தேரையும், சிவன் சக்தி அன்றி வேறு ஒரு சக்தியாலும் அழிக்க முடியாது எனும் வரத்தையும் பெற்றிருந்தான். இவ்வரத்தைப் பெற்ற சூரன் முதலானோர் தம்மைப் போல் பலரை உருவாக்கி அண்ட சராசரங்கள் எல்லாவற்றையும் ஆண்டு இந்திரன் முதலான முப்பத்து முக்கோடி தேவர்களையும் சிறையிலிட்டு சொல்லொணா துன்பங்களைக் கொடுத்து அதர்ம வழியில் ஆட்சி செய்தனர்.

அசுரர்களின் இந்தக் கொடுமையைத் தாங்க முடியாத தேவர்கள் கைலாயம் சென்று சிவனிடம் முறையிட்டனர். இறைவனும் அவர்கள் மேல் திருவுளம் கொண்டு அவர்களை அந்தத் துன்பத்தில் இருந்து காப்பாற்றும் நோக்குடன் தனது நெற்றிக் கண்ணைத் திறக்க (சிவபெருமானுக்கு ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் ஆகிய ஐந்து முகங்கள் உண்டு. இவை தவிர ஞானிகளுக்கு மட்டுமே தெரியக்கூடிய “அதோமுகம்” (மனம்) என்ற ஆறாவது முகமும் உண்டு) அவைகளிலிருந்து தோன்றிய ஆறு தீப்பொறிகளையும் வாயுபகவான் ஏந்திச் சென்று வண்ண மீனினம் துள்ளி விளையாடும் தண்மலர் நிரம்பிய சரவணப் பொய்கையில் தாமரை மலர்களின் மீது சேர்க்கப்பெற்றன.

அந்த தீப்பொறிகள் ஆறும் உலகின் பொன்னெல்லாம் உருக்கி வார்த்ததென ஆறு குழந்தைகள் தோன்றின. அந்த ஆறு குழந்தைகளையும் ஆறு கார்த்திகைப் பெண்கள் சீராட்டி பாலூட்டி வளர்த்து வரும் வேளை அகிலலோக நாயகி பார்வதி தன் மைந்தர்களை அன்புடன் கட்டியணைத்திட அவை யாவும் ஒரு திருமேனியாக வடிவங்கொண்டு ஆறுமுகங்களும் பன்னிரு திருக்கரங்களும் உடைய ஒரு திரு முருகனாக தோன்றினன் உலகமுய்ய. ஆறுமுகங்களும் பன்னிரு திருக்கரங்களும் உடைய திருவுருவை பெற்றமையால் “ஆறுமுக சுவாமி” எனப் பெயர் பெற்றார்.

இந்த ஆறு திருமுகங்களும் ஞானம், ஐஸ்வர்யம், அழகு, வீரயம், வைராக்கியம், புகழ் என்னும் ஆறு குணங்களையும் குறிக்கின்றன. பிரணவ சொரூபியான முருகப் பெருமானிடம் காக்கும் கடவுளான முகுந்தன், அழிக்கும் கடவுளான ருத்ரன், படைக்கும் தெய்வமான கமலோற்பவன் ஆகிய மும்மூர்த்திகளும் அடக்கம். ஆறுமுகன் சிவாக்னியில் தோன்றியவன். அதனால் “ஆறு முகமே சிவம் சிவமே ஆறுமுகம்” எனப்படுகிறது.

முருகப்பெருமான் அசுரர்களான சூரபத்மாதியரை அழிக்கப் போர் புரிந்த திருவிளையாடலையே நாம் கந்த சஷ்டி விழாவாகக் கொண்டாடுகிறோம். சூரபத்மனின் ஒரு பாதி “நான்” என்கிற அகங்காரம் மற்றொரு பாதி “எனது” என்கிற மமகாரம்.

பன்னிரண்டு கைகளுடன் ஆறு திருமுகமும் கூடிய அழகின் அழகாய் தேவசேனாதிபதியாய், தேவரும் முனிவரும் வாழ்த்த சர்வ சத்தியாம் பார்வதி தந்த தனிப் பெரும் ஞான வேலை சக்தியாகக் கொண்டு சூரபன்மனைச் சம்ஹாரம் செய்யப் புறப்பட்டு சென்றார். அவர்களுடன் முருகப் பெருமான் மேற்கொண்ட போர் ஐப்பசித் திங்கள் வளர்பிறையில் பத்து நாள்கள் நடைபெற்றது. முதல் நான்கு நாள்களில் சூர பத்மனைச் சேர்ந்த வீரர்களை அழித்து அவனது பலத்தைத் துவம்சம் செய்தார்.

தாரகனையும் அவனுக்குத் துணை நின்ற கிரௌஞ்சத்தையும் பிளந்து, சிங்கமுகனை அழித்து பின் சூரனின் சேனை அழிந்த போதும் சூரபதுமனின் ஆணவம் அழிய இல்லை. அதனால் முருகன் தன் திருப்பெரு வடிவம் (விஸ்வரூபம்) காட்டி, எல்லாம் வல்ல பரம்பொருள் தாமே என பரமேசுர வடிவம் காட்டி, சிவனும் அவன் மகனும் மணியும் ஒலியும் போல ஒருவரே என்றுணர்த்தியும், தன் தன்மை மாறாது மாயைகள் பல புரிந்து போர் செயலானான்.

கடைசியாக் நடுக்கடலடியில் மாமரமாய் நின்ற சூரபத்மனைத் முருகன் தன் வேலாயுதத்தால் இரு கூறாக்கினார். ஆணவம் அழியப் பெற்ற சூரன் தம் தவறை உணர்ந்து தன்னை மன்னித்து, ஏற்றுக் கொள்ளும்படி மன்றாடி வேண்டிநிற, ஈருடலும் ஒருயுருமய் இருந்த சூரபதுமன் , அவை இரண்டையும் முருகன் தன் அருளால் சேவலாகவும் மயிலாகவும் மாற்றி, மயிலை வாகனமாகவும் சேவலைக் கொடியாகவும் தன்னுடன் பிணைத்துக் கொண்டார்.

ஞானசக்தியான வேலின் தாக்கத்தால் ஆணவ மலம் வலியிழந்து ஆன்ம பரம்பொருளின் திருவடி அடைந்ததெனும் மறைபொருளை உணர்த்த அனுஷ்டிக்கப்படும் விரதமே கந்தர் சஷ்டி விரதம். இந்த அருட்பெருங்கருணைச் செயலை வியந்து இப்போர் நிகழ்ந்த காலமாகிய ஐப்பசி மாத வளர்பிறை முதலாறு நாள்களையும் விரத நாள்களாகக் கொண்டு முனிவரும் தேவரும் நோற்று வந்தனர். இதுவே ஸ்கந்தசஷ்டி என்ற நாமத்தோடு நாம் அனுஷ்டிக்கும் விரதமாகும்.

ஊனை உருக்கி உள்ளொளி பெருக்கும் இவ்விரதத்தை தம் உடல் நிலைக்குத் தக்கதாக கடைப்பிடிப்பர். சிலர் ஆறு நாள்களும் எவ்வித அன்ன ஆகாரமின்றியும், சிலர் பானம் மட்டும் அருந்தியும், பலர் முதல் ஐந்து நாள்களும் ஒரு நேரம் உணவு உண்டு (பாலும் பழமும்) கடைசி நாளான ஆறாம் நாள் முழு உபவாசத்துடன் நித்திரை விழித்திருந்தும் ஏழாம் நாள் காலை முருகனை வழிபட்ட பின் பாரணை மூலம் விரதத்தைப் பூர்த்தி செய்வர்.

### கந்த சஷ்டி விரதத்தில் படிக்க வேண்டியவை

இவ்விரதத்தின் போது, தினமும் கந்த சஷ்டி கவசம், கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி, திருப்புகழ், கச்சியப்ப சுவாமிகளின் கந்த புராணம் ஆகியவற்றைப் படித்தால், என்னவென்று சொல்ல முடியாத மனஅமைதி நிலவும். இதனை ஒவ்வொருவரும் உணர்ந்திருப்பர்.

### விரத அனுஷ்டானங்களும் விதிமுறைகளும்

நாம் ஆறுமுகநாவலரின் “விரதம்” என்பதற்கான வரைவிலக்கணத்தை நோக்கின் “மனம் பொறி வழி போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும், சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் எனும் மூன்றினாலும் இறை அன்போடு, கடவுளை விதிப்படி வழிபடல்” என்கிறார். அவ்வாறான கட்டுப்பாடுகள் ஊடாக ஐம்புலனடக்கி மன அடக்கத்தைக் கந்த சஷ்டி விரதம் நமக்கு உணர்த்துகிறது.

இவ்விரதம் ஆறு வருடங்கள் தொடர்ந்து கைக்கொள்ளப்பட வேண்டும் (கார்த்திகை விரதம் பன்னிரெண்டு வருடங்களும், வெள்ளிக்கிழமை விரதம் மூன்று வருடங்களும் அனுஷ்டிக்கப்படுகின்றது). உபவாசம் அல்லது ஒரே நேர உணவு என்பது உணவு நியதி ஆறு வருடமும் அல்லது பன்னிரண்டு வருடங்களும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். முறைப்படி சங்கல்ப பூர்வமாக ஆரம்பித்து கடைசி வருடம் விரத முடிவில் விரதோத்யாபனம் செய்து (நிறுத்தி) பூர்த்தி செய்து கொள்ள வேண்டும்.

கந்த சஷ்டி என்னும் போது அதற்கென சில விரத நியதிகள் தனித்துவம் பெற்றுத் திகழ்கின்றன. இவ்விரதம் அனுஷ்டிக்க விரும்புவோர் விரத நாள்களில் வைகறையில் துயில் எழுந்து சந்தியாவந்தனம் முதலிய காலைக்கடன்களை முடித்து, ஆற்றில் இறங்கி நீரோட்டத்தின் எதிர்முகமாக நின்று, தண்ணீரில் ஷட்கோணம் வரைந்து, அதில் சடாக்ஷர மந்திரத்தை எழுத வேண்டும். “ஓம்’ என்ற பிரணவ மந்திரத்தையும் நடுவில் எழுதி, முருகனை மனதில் இருத்தி நீரில் மூழ்கி எழ வேண்டும்.

கிணறு, குளம் போன்ற நீர்நிலைகளில் நீராடுபவர்கள் வடதிசை நோக்கி நின்று மேற்கூறியவாறு தூய நீராடி, தோய்த்துலர்ந்த ஆடையணிந்து அமைதியான இடத்திலோ அல்லது ஆலயத்திலோ அமர்ந்து அல்லல் தீர்க்கும் ஆறுமுகப் பெருமானை நினைந்து தியானம் செய்ய வேண்டும். தியானத்துடன் நில்லாது மனம் பொறி வழிச் செல்லாது இறையருளை நாடி வேறு சிந்தனையின்றி களிப்புற

(18ஆம் பக்கம் பார்க்க)

# முருகனின் விரதங்களில் ஒன்று கந்தஷஷ்டி!

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். விரத காலங்களில் மனம் வேறு எண்ணங்களில் ஈடுபடாதிருக்க கந்தசஷ்டி கவசம், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, கந்தர் கலிவெண்பா போன்ற நூல்களைப் படிக்க வேண்டும். முருகனாலயங்களில் இவ்விரத நாள் களில் கந்தபுராண படனம் நடைபெறும். இதை தவறாது கேட்டல் மிகவும் ஆன்மிக நன்மை பயக்கும்.

தண்ணீர் கூட அருந்தாது ஆலயத் தில் வழங்கப்படும் பானகம் (தீர்த்தம்) மட்டும் அருந்தியிருத்தல் உத்தமோத்த மமான விரதமாகும். பானகமென்பது சர்க்கரை, தேசிக்காய், இளநீர், முதலியன கலந்து தயாரிக்கப்படும் ஒரு நீராகாரம் ஆகும். பட்டினி கிடக்கும் வயிற்றினுள் வெளிப்படும் அதிக சக்தி மிக்க வெப்பம், வாய்வு, பித்தம், இவற் றைத் தணித்து உடற்சமநிலையைப் பேணுவதற்கும், பசி, தாகம், இவற்றை ஓரளவு தணிக்கவும் இது உதவுகிறது.

கந்தசஷ்டி விரத நாள்களில், ஆன்மா மும்மலங்களையும் நீக்குவதற்குரிய பக்குவமான மனதுடன் நாம் இருக்க வேண்டும். உணவையும் உறக்கத்தை யும் தவிர்த்து, தனித்திருந்து செய்யும் தவமே கந்தசஷ்டி விரதம். அதற்குரிய பலன் மும்மலம் நீங்கி ஆன்மா முக்தி யைப் பெறுவதே ஆகும்.

இந்த ஆறு நாள்களும் பூரண உப வாசம் இருப்பது அதி உத்தமம் எனக் கருதப்படுகின்றது. மிளகுகளை விழுங்கி, பழம் மட்டும் சாப்பிட்டு, தீர்த்தம் குடித்து, இளநீர் குடித்து ஒரு நேர உணவு மட்டும் உண்டு அவரவர் தேக நிலைக் கேற்ப "கந்தசஷ்டி" விரதம் அனுஷ்டிக் கப்படுகின்றது. ஆறாவது நாளான கந்தசஷ்டியன்று பூரண உபவாசம் இருத்தல் வேண்டும். விரதம் ஆரம்ப மான தினத்தில் ஆலயம் சென்று சங்கர்ப்பம் செய்து காப்புக் கட்டி விரதத் தைத் தொடங்க வேண்டும்.

ஒரு விரதத்தை ஆரம்பிக்கும் முன் இன்ன நோக்கத்துக்காக இன்னமுறைப் படி இவ்வளவு காலம் அனுஷ்டிக்கப் போகின்றேன் என்று உறுதியாகத் தீர்மானம் செய்து (சங்கல்பம் செய்து) ஆலயம் சென்று சங்கல்ப பூர்வமாக அர்ச்சனை வழிபாடுகள் செய்து ஆரம்பிக்க வேண்டும். குறிப்பிட்ட கால எல்லைவரை மாற்றமின்றி அவ்விர தத்தை ஒழுங்காகக்கைக் கொள்ள வேண்டும்.

உரிய காலம் முடிந்ததும் விரத உத்தி யாபனம் செய்து விரதத்தை நிறுத்த வேண்டும். விரதத்துக்குரிய மூர்த்தியின் வடிவத்தைப் பொன் பிரதி மையாகச் செய்து வீட்டிலே வைத்து முறைப்படி கும்பங்கள் ஸ்தாபித்து சங்கல்ப பூர்வ மாகப் புண்ணியாகவாசனம் முதலிய பூர்வாங்க கிரியைகளுடன் ஆரம்பித்து சமஸ்தோபசார பூசைகளையும் செய்து முடித்து அன்று முழுவதும் உபவாசமாயி ருத்தல் வேண்டும். மறுநாள் அதிகாலை யில் நீராடி நித்திய கர்மானுஷ்டானங்கள் செய்து மறுபடியும் அவற்றுக்குப் பூசை கள் நடத்திய பின் கும்பப் பொருட்கள் பொன் பிரதிமையும் மற்றும் தானப் பொருட்கள் யாவும் சேர்த்து வேட்டி, சால்வை, அரிசி, காய்கறி, தாம்பூலதஷி ணைகள் பூசைகளைச் செய்வித்த குருவுக்கு வழங்கி முறைப்படி நான் கைக்கொண்ட இந்த விரதத்தை இன்று உத்தியாபனம் செய்து முடிக்கின்றேன். சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட படி இவ்விரதத்திற்கு உரிய பலன்களைத் தந்தருள வேண்டும் என்று பிரார்த்தனை செய்ய வேண்டும் தம்பதிபூசை, சுமங் கலி பூசை முதலியன குறித்து விரதத் துக்கு சொல்லப்பட்டிருந்தால் அவற் றையும் செய்து முடிந்தபின் மாஹேஸ்வர பூசை செய்து வீட்டுப் பாரணை பண்ண வேண்டும். பாரணை காலை எட்டரை மணிக்கு முன் செய்து முடிக்க வேண்டும் என்பது விதி. சிலர் உதயத்துக்கு முன் விரதத்துக்கு உரிய பாரணையை முடித்து விடுவதுண்டு. ஆனால் சூரிய உதயத் துக்கு முன் பாரணை செய்தல் விதி யன்று.

உரிய நேரத்தில் பாரணை பண்ணுவ தற்குத் தடைகள் ஏற்பட்டால் பாரணைக் காக சமைத்த உணவைச் சாமிப்படத் திற்கு முன்படைத்து அதனை இந்த உரிய நேரத்தில் முகர்ந்து விடுதல் போதுமானது. பின்னர் இயன்ற பொழுதில் சாப்பிடலாம்.

சமையல் தயாரிப்பதிலும் தாமதம் ஏற்படின் சாமிப் படத்துக்கு முன் ஒரு சிறு பாத்திரத்தில் நீரெடுத்து வைத்து அதில் துளசியை இரண்டு அடியிலைக ளுடன் கூடிய கதிராக எடுத்து அந்த நீரை உரிய காலத்தில் அருந்தி பார ணையை நிறைவு செய்யலாம். பின்னர் வசதியான போது சாப்பிடலாம்.

ஒரு விரதத்தின் முடிவில் அதாவது பாரணை நாளில் இன்னொரு விரதம் வந்தால் இந்த முறையையே கடைப் பிடிக்க வேண்டுமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இரண்டாவது விரதமும், உபவாசமாக இருந்தால் முதலாவது விரத்தின் பாரணையைத் துளசி, தீர்த்தம் அருந்தி நிறைவேற்றி விட்டு இரண் டாவது விரதத்தை முறைப்படி உப வாசமாக அனுஷ்டித்து அதற்கு மறுநாள் பாரணை செய்ய வேண்டும்.

பெரும்பாலும் கேதாரகௌரி நோன் பின் மறுநாள் கந்தசஷ்டி விரதாரம்பம் அல்லது கந்தசஷ்டி விரத முடிவில் அதா வது பாரணையன்று சோமவார விரதம் வருவதுண்டு, இச் சந்தர்ப்பத்தில் முதலில் நாம் பார்த்தவாறு தான் விதி முறையைக் கைக் கொள்ள வேண்டும்.

விரத நியமனங்களை ஆரம்பத்தி லேயே அளவுடன் கைக்கொள்வது நன்று கடுமையான முறையில் ஆரம் பித்து பின்னர் அரைகுறையாக நிறுத்து வது கூடாது. விரதத்தை கிரமப்படி அனு சரிக்க முடியாதவர்கள் தம்மாலியன்றளவு அனுசரிப்பதே தகுதி தம்மளவுக்கு மீறி உடலை வருத்த நேரிடின் விரதத்தில் வெறுப்பு தோன்றும் இதனால் விரத பலன் இல்லாமல் போய்விடும்.

ஆலயங்களில் ஆரம்ப தினத்தி லேயே தர்ப்பையணிந்து காப்புகட்டி, சங்கல்பித்து ஆறு நாளும் நோன்பிருத் தல் முறை, இறுதி நாளில் கர்ப்பை அவிழ்த்துத் தர்ப்பையுடன் சேர்த்துத் தாம்பூல தஷிணைகளுடன் அர்ச்சகரிடம் சமர்ப்பிப்பர்.

ஏழாம் நாள் அதிகாலையில் நீராடி நித்திய கர்மானுஷ்டானங்களை நிறை வேற்றிப் பாரணைப் பூஜை என்று நடை பெறும் விசேஷ பூஜையையும் கண்டு வழிபட்டபின் மாஹேஸ்வர பூசை செய்து (அடியார்களுக்கு அன்னமிட்டு) பாரணை செய்ய வேண்டும்.

இவ்விதம் கடும் விரதம் அநுஷ்டிக்க முடியாதவர்கள் முதல் ஐந்து நாட்களும் இரவு ஒரு பொழுது பால்பழம் அல்லது பலகாரம் உண்டு இறுதி நாள் உபவாசம் இருக்கலாம். அதுவும் முடியாவதவர்கள் முதல் ஐந்து நாட்களும் பகல் ஒரு பொழுது அன்னமும் ஆறாம் நாள் இரவு பாலப்பழம் அல்லது பலகாரமும் உண்டு விரதமிருக்கலாம்.

ஆறாம் நாள் ஷஷ்டித் திதியில் சூரசம்ஹாரம் முடிந்த அன்றிரவு முழுவதும் விழித்திருந்து முருகன் பெரு மைகளையே பேசியும், வழிபட் டிருக்கமாறு பழம் நூல்கள் விதிக்கின் றன. சிவபிராணுக்கு உரிய சிவராத்திரி யும், மஹாவிஷ்ணுக்குரிய வைகுண்ட ஏகாதசியும் போல முருகப்பெருமானுக் குரிய ஸ்கந்தசஷ்டியும் மிகவிஷேஷ மான தினமாதலால் துயில் நீத்தல் (விளித்திருத்தல்) பொருத்தமானதே. ஆயினும் அனைவராலும் இது கைக் கொள்ளப்படுவதில்லை. இயன்றவர்கள் கைக்கொள்க.

விரதோயாபனத்தின் போது முருகன் ஆலயம் சென்று விரத பூர்த்தி சமயத்தில் விரதத்துக்குரிய பலன்கள் எனக்குச் சிந்திக்க வேண்டும் என்பதற்காக இந்த விசேச பூஜையை செய்கின்றேன் என்று சங்கல்பித்து விஷேஷ அபிஷேகம் பூஜை, ஷண்முகார்ச்சனை அல்லது சஹஸ்ர நாமார்ச்சனை முதலியவற்றைச் செய்வித்து காப்பு தர்ப்பை இவற்றுடன் தாம்பூலம் தஷிணை, வேட்டி, சால்வை, அரிசி, காய்கறிமுதலிய தானங்களையும் சேர்த்து அர்ச்சகரிடம் சமர்ப்பித்து மகிழ்ச்சியுடன் இந்தத் தானத்தை வழங் குகின்றேன். சாஸ்திரங்களில் சொல் லியிருப்பது போல இந்த விரதபலன்கள் எனக்கு உண்டாகட்டும் என்று பிரார்த் திக்க வேண்டும்.

விரதங்கள் மக்களின் மன வலிமை அதிகமாகவும், நம்பிக்கைகளின் அடிப் படையில், அவர்களது வாழ்வில் வள மும், நலமும், மிகுவதற்கு பயன்படு கின்றன. ஏனைய விரத அனுட்டா னங்களைப் போலன்றி கந்த சஷ்டி விரதானுஷ்டானத்தை ஆண்களும், பெண்களும், பிள்ளைகளும் கடைப் பிடிக்கின்றார்கள். மாணவர்கள் படிப்பிற் கும், குடும்பப் பெண்கள் குடும்ப நன்

(19ஆம் பக்கம் பார்க்க)

# முருகனின் விரதங்களில் ஒன்று கந்தஷ்டி!

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

மைக்கும், கன்னிப் பெண்கள் நல்ல கணவனை வாழக்கைத் துணையாக அடைய வேண்டியும், குழந்தை இல்லா தோர் குழந்தை வேண்டியும் இவ்விர தத்தை அனுஷ்டிக்கின்றனர்.

இங்கு குறிப்பிட்ட விதத்தில் வீட்டிலே பூசைகளைச் செய்வதும் பொன் பிரதி மைகளைச் செய்து தானம் கொடுப்பதும் யாவருக்கும் எளிதானதன்று இதனால் உத்தியாயனமே செய்யாது விடுவதும் முறையன்று எனவே உரிய காலத்தில் ஆலயம் சென்று விரத உத்தியாபனம் செய்யப் போகின்றேன் என்று குரு முகமாகச் சங்கல்பம் செய்து இயன்ற வகையில் விசேஷ அபிஷேகம் பூசை அர்ச்சனை வழிபாடுகளைச் செய்து குருவுக்கு தாம்பூல தட்சணைகளும், தானங்களும் இயன்றவரையும் வழங்கி விரதத்தை மனநிறைவோடு முடித்து இறைவனிடம் சமர்ப்பிக்கலாம்.

உடலின் சுமை குறைவதால் மிகக் கடுமையான நோய்களைக்கூட உண் ணாநோன்பின் மூலம் நீக்கிவிட முடியும். உண்ணா நோன்பின் போது, உடலில் நோயுற்ற திசுக்களே முதலில் கரைக் கப்படுகின்றன. கொழுத்த உடல் கொண்ட மனிதன், உண்ணா நோன் பின்போது மறைமுகமாக உண்டு கொண்டே இருக்கிறார். உள்ளுருப்புக் களை வீணாகச் சுற்றியிருந்த பகுதிகள் கரைக்கப்படுகின்றன. உண்ணா நோன்பு மிகவும் எளிய, ஆனால் சிறப் பான ஊட்டச்செயலாக அமைந்து, உடலைக் காக்கிறது.

உண்ணா நோன்பின்போது, உடல் ஓய்வடைகிறது. எல்லா உறுப்புக்களுக் கும் அமைதி கிட்டுகிறது. நரம்புகள் தளர்ச்சி நீங்குகின்றன. வெப்பநிலை மாறி தண்மை ஏற்படுகிறது. கழிவுப் பொருள்களை உடலிலிருந்து வெளி யேற்ற இயற்கை கொள்ளும் வழிகளில் உண்ணா நோன்பு மிகவும் சிறந்ததாக அமைந்திருக்கிறது. இரத்தமும் நிணநீரும் தூய்மையாக்கப்படுகின்றன. காம உணர்வு தணிகிறது. தூய நினை வுகள் வளர்கின்றன. மனதின் சக்தி, பகுத்தறிகின்ற ஆய்வுநிலை, நினைவு கூறும் சக்தி, இணைத்துக்காணும் அறிவு அதிகமாகின்றது. உண்ணா நோன்பினால் இளையவரும், முதிய வரும் புதுப்பிக்கப்படுகிறார்கள். உடல் உறுப்புக்களில் மாத்திரம் அல்லாமல், உடலியல் செயல்களிலும் இது நிகழ் கிறது.

### கந்தசஷ்டி விரதத்தின் பலன்

குடும்பத்தில் துன்பங்கள் நீங்கவும், வேலை வாய்ப்பு, கடன் தொல்லை நீங்கவும் இவ்விரதத்தை கடைப்பிடிப்பது நன்று. "சட்டியில் இருந்தால் அகப்பை யில் வரும்" என்பது பழமொழி. இதன் உண்மையான பொருள், சஷ்டியில் விரதமிருந்தால் கருப்பையில் குழந்தை உண்டாகும் என்பதாகும். எனவே குழந்தை வரம் வேண்டும் பெண்களுக்கு இது மிகவும் சிறந்த விரதமாகும். சுருக்கமாகச் சொன்னால் இந்த விர தத்தை கடைப்பிடித்து விரும்பிய பலனைப் பெறலாம்.

எந்த வினையானாலும், கந்தன் அருள் இருந்தால் வந்த வழி ஓடும் என்பது ஆன்றோர் வாக்கு. அந்த ஆறுமுகனுக்கு உரிய விரதங்களுள் மிக முக்கியமானதாகச் சொல்லப்படுவது கந்தசஷ்டி விரதம்.

# நீரிழிவு நோயில் இருந்து எம்மைப் பாதுகாக்க ஆரோக்கியமான வாழ்க்கை முறை அவசியம்

## பூநகரி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் உரை

(த.சுபேசன்)

ஆரோக்கியமான வாழ்க்கை முறை யைக் கடைப்பிடிப்பதே நிரிழிவு நோயி லிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான சிறந்த வழியாகும்.

இவ்வாறு பூநகரிப் பிரதேச மேற் பார்வைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் தெரிவித்துள் ளார்.

முழங்காவில் மகாவித்தியாலயத்தில் நீரிழிவு தினத்தை முன்னிட்டு செவ் வாய்க்கிழமை இடம்பெற்ற விழிப் புணர்வு நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத் துத் தெரிவிக்கையில்,

ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பின்பற்றுவதே தரமான வாழ்வை நாம் வாழ வழி சமைக்கிறது. எனவே மாணவப் பருவத்திலில் இருந்தே இதற்கு ஏற்றால்போல் எமது திறன்களையும் மனப்பாங்கையும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

பரம்பரைக் காரணிகள், எமது உணவுப் பழக்கம், உடற்பயிற்சியற்ற நிலை, மாசுபடும்சூழல் போன்றன நிரிழிவு நோய் ஏற்படுவதற்கான ஆபத் துக் காரணிகளாக உள்ளன.

குருதியில் மேலதிகமாக குளுக் கோசு உயர் மட்டத்தை அடைவதே



நீரிழிவு நோயாகும். எமது உடலில் இன்சுலின் எனும் ஓமோனின் சமநிலை பாதிக்கப்படுவதால் இவ்வாறு ஏற் படுகின்றது. எனவே நாம் மாப்பொருள் மற்றும் கொழுப்பு வகை உணவுகளை குறைந்தளவிலும் நார்ச்சத்து, புரதம், கனியுப்பு மற்றும் விற்றமீன்கள் அடங் கிய உணவுகளை அதிகமாகவும் உண்ண வேண்டும்.

உள்ளூரில் கிடைக்கும் மரக்கறி வகைகள், சிறிய மீன்கள் , கொழுப்பு குறைவான இறைச்சி, முட்டை மற்றும் உள்ளூர் பழங்களையும் எமது உண வில் சேர்த்துக்கொள்ள வேண்டும். சோற்றுக்கு கறி என்பதற்கு பதிலாக கறிக்குச் சோறு எனும் வகையில் உணவை உள்ளெடுக்க வேண்டும்.

நீரிழிவு நோய்கு உள்ளாகும் போது, காயங்கள் நீண்ட நாள்களுக்கு ஆறாத நிலை, அங்க இழப்பு, இதய நோய்கள், சிறுநீரக பாதிப்பு மற்றும் தோல் நோய்கள் என்பனவும் ஏற்படுவதோடு தங்கி வாழும் தன்மையையும் குறுகிய ஆயுளில் உயிரிழப்பையும் ஏற்படுத்தி விடுகின்றது.

எனவே நோய் இனங்காணப்பட்ட வர்கள் வைத்தியரின் ஆலோசனைப்படி தொடர்ந்து மருந்துகளை உள்ளெ டுப்பதுடன் உணவுக்கட்டுப்பாடு மற்றும் உடற் பயிற்சிகளுடன் தரமான வாழ்வை வாழ முடியும்.

மாணவர்கள் நீரிழிவு நோய் பற்றிய தெளிவான அறிவைக் கொண்டிருந்தால் வருமுன் காக்கவும், ஆயுளை அதிகரித்து தரமான வாழ்வை வாழவும் அது பெரிதும் துணைபுரியும்.- என்றார்.




# சிறுவரை மகிழ்ச்சிகரமாகப் பேணும் பட்டம் விடும் நிகழ்வு தாண்டியடியில்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சிறுவர்கள் இவ்வுலகில் விலை மதிக்க முடியாத செல்வம். அவர்களை மகிழ்ச்சிகரமான சூழலில் வைத்திருப்பது எமது அனைவரதும் கடமைப்பாடாகும்.

அந்த வகையில் அம்பாறை ஸ்ரீ லங்கா யுனைட்ஸ் செயற்பாட்டு மையம் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த சிறுவர் குழுவொன்றை பொத்துவில் தாண்டியடி கடற்கரை பிரதேசத்தில் பட்டமிடும் பொழுது போக்கு நிகழ்வொன்றை ஒழுங்கு செய்திருந்தது.

இந்த நிகழ்வில் ஸ்ரீ லங்கா யுனைட்ஸ் செயற்பாட்டாளர்கள் மற்றும் சிறுவர்கள் கலந்து கொண்டனர்.




# புனரமைப்புச் செய்யப்பட்ட பள்ளிவாசல் திறந்து வைப்பு

(எம்.ஏ.ஏ.அக்தார்)

புத்தளம் – அக்கறவெளி தாருஸ்ஸலாம் தைக்கா பள்ளிவாசல் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு திறந்து வைக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை எஸ். எம். இர்ஷாட் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பள்ளிவாசலைத் திறந்து வைத்தார்.

யூ.எஸ்.எம்.ஹார்ட்வேயார் உரிமையாளர் இம்தியாஸ், ஆராச்சிக்கட்டு பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் முஹம்மட் நிஜாம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.




# ‘உறவுகள் சொல்லும் உணர்வு’ சிறுகதை நூல் அறிமுக விழா!

(ஹஸ்பர்)

கதிர்.திருச்செல்வத்தின் ‘உறவுகள் சொல்லும் உணர்வு’ சிறுகதை நூல் அறிமுக விழா நேற்று புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு கவிஞர் க. யோகானந்தன் தலைமையில் திருகோணமலை – கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நூல் அறிமுகத்தை மாகாண கல்வி அமைச்சின் திட்டப் பணிப்பாளர் ஏ. சி.எம். முஸ்ஸில் நிகழ்த்தினார்.

முதன்மை அழைப்பாளராக கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ச.நவநீதன் கலந்து கொண்டார்.

நூல் திறனாய்வை தென் கிழக்குப் பல்கலைக்கழக மொழியியல் துறை பேராசிரியர் அ.ப.மு. அஸ்ஃரப் நிகழ்த்தினார். நூலின் முதல் பிரதியை அதிபர் திருமதி யு. சுஜந்தினிக்கு பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ச. நவநீதன் வழங்கி வெளியீட்டு வைத்தார்.